[அகை:] அகமில்லாதது இவனுக்கேயிறே. அகமாவதுவும் தேச்யவிரோதியிறே; இவ்விடத்தில் அகமாவது — சமபக்தி, இதனைப் பாபமென்னலாமோவென்ன, பாபத்தில் புண்யம் கண்டிருக்க, மோக்ஷவிரோதியாகையாலே புண்யமும், 33 "अश्व इव रोमाणि विधूय पापं" (அச்வ இவ ரோமாணி விதூய பாபம்) என்று பாபசப்தவாச்யமாய்த்திறே. ஆகையாலே பரதாழ்வாருக்கு வரும் உத்தேச்யத்துக்கு விரோதியாகில் சம்பந்தத்திலே காலாமுமதுவும் பாபமிறே. 29 "रामे प्रमादं मा कार्षीः पुत्र भ्रातरि गच्छति" (ராமே ப்ரமாதம் மாகார்ஷீ: புத்ர ப்ராதரி கச்சதி) என்று ராமாதுவருக்கும் இடைச்சுவராகச் சொல்லிறதிறே.

[ஸுஹ்ருத:] பின்னைகளுடைய ஸந்நிவேசங்களைப் பார்த்துத் திருநாமம் சாத்துகிற ஸ்ரீவசிஷ்டபகவான், பெருமாளை கண்டாரை அழகாலே அலைக்கவல்லராகத் தோற்றுகையாலே ராமனென்று, இளையபெருமாள் கைங்கர்ய நிரூபகமாகத் தோற்றுகையாலே லக்ஷ்மணனென்றும் திருநாமம் சாத்தினாப் போலே, இவனுடைய ஸந்நிவேசத்தைக் கண்டே ஸுஹ்ருத்தென மனனுமனுப்படியிருக்கக் காண்கையாலே ஸுஹ்ருத்தென்று திருநாமம் சாத்தினீரே.

[தேவஸுதோபமா:] பாஹ்யஸுதகங்களெதிலே ஆந்தர ஸுதங்களை இந்த்ரியங்களையும் ஜயித்திருக்குமென்கை. அவிக்ருதிய ஜயத்துக்கு எல்லை எவ்வளவென்னில்; — 15 "पुंसां दृष्टिचित्ता-पहारिण" (பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்) என்கிற ராம ஸௌந்தர்யத்திலும் கலக்குண்ணாதிருக்கை. அதாவது-பெருமாளைப்பற்றுமவர்போலும் தன்னுக்பபாலேயாதல் அவனுடைய வைலக்ஷண்யத்தாலேயாதலன்றிக்கே தனக்கு உத்தேச்யனுவன உகாத விஷயமென்று பற்றுகை.

[நீத] ராஜாக்கள் போம்போது உடைவாள் பரிசு மற்றொன்று கொண்டுபோமோபாதி அவனைக் கொண்டு போம போனான்; த்ரவ்யத்துக்கு த்ரவ்யாந்தரங்களோடே ஸம்ப்ரயோகம் உபபவிஷ்டமாயிருக்குமிறே. அதுபோலன்றிக்கே ஜாதிருளை கனைக்பாதி போனான். [ப்ரீதிபுரஸ்க்ருத] ஜயேயட்டமற்லாதிகாத்தவனென்று போனானல்லன். 9 "अहं सर्वं करिष्यामि" (அஹம் ஸர்வம் கரிஷ்யாமி) என்று போன இளையபெருமாளைப் போலே ஸர்வசேஷவ்ருத்திகளையும் பண்ணலாமென்று கொண்டு ப்ரீதி ப்ரேரிக்கப்போனான். படைவீட்டிலிருந்தால் பருண்டாகையாலே விழுக்காடுபோதியிறே லிதத்தபடி.

"நீத:" என்கையாலே மேவஸ்தலத்தில் அசித்கல்பனாயிருக்கக் கடவன். "ப்ரீதிபுரஸ்க்ருத:" என்கையாலே ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியிலே ஸ்தகப்ரயுக்தமான தர்மங்களுண்டாயிருக்கை.

§ "பயலாய்க்கிடந்தனை படைவானமக்கலேனே" என்றிதே அடி
பிடிக்கிறவர்தனை. "அந்த 'தேவுமற்றறியேன்'" என்று பாசுரத்தை
ஆரும் பேசுகையாலும் அவர்களே பற்றினேனென்னவுமாம்.

"அந்த" "தேவுமற்றறியேன்" என்றதுக்கு பரபோதகமென்
றெனவில், 'ஸ்ரீமந்நாதமுனிகள் பெருமாளுக்கு கலைப்படி
அவர்பலைதறியாத ஸ்ரீபராங்குசன்னவர்களை வேறொன்றறியாத
படியானேன்" என்று எம்பெருமானாரருளிச்செய்தார். இதுவே
பரபோதகமானால் சொன்னதிக்கையெல்லாம் பொருந்தும்; ஆக
ஸ்ரீமந்நாதமுனிகள்போலே இருப்பாரொருவராயிற்று ஸ்ரீமதுர
கவிகள்.

இனி த்ரீயருந்தகேசவசென்றுமிட்டத்தில பகவத்பயந்தமாத
சத்திலே விஷயகாரத்தை, தச்விஷயத்திலே அவகாஹித்த தத
குணதுலைதாகத்தாலல்லது செல்லாத தலையிலே 16 **"बोधयन्तः परस्परं"** (போதயந்த பரஸ்பரம் என்கிறபடியே இப்போது
போதுபோகதனைக்கு உசாத்துணையாயும், 17 **"यत्र पूर्वे साध्याः सन्ति देवाः"** யத்ர பூர்வே ஸாத்யாஸ்ஸந்தி தேவா:) என்கிறபடியே
பாப்தினையில் பகைத்தபல ஸஹகாரிகளாயும் இப்படி பரம
முகமான உபகாரத்துடனே லாவாயஸ்தைமிலும் தனியே உபதேசப
சென்றுகுதிப்பிட்டுத் தனக்கு வைஷ்ணவிஷயிகாரத்துக்கு முன்னே
அஜ்ஞாநத்துறாபாமுகத்தாலே பகவத்விஷயத்திலே மூட்டின
மஹோபகாரகரான ஆழ்வார் தம்மையே பற்றுகிறார்.

இப்படி இவர் பரமாச்சார்யரான ஆழ்வார்விஷயத்திலே "தேவு
மற்றறியேன்" என்று 'மயகாப்ரதிபத்தி பண்ணுகைக்கு அடியென்
னென்னில்; 75 **"देवमिवाचार्यमुपासीत"** (தேவமிவாசார்யமுபாஸீத)
என்றும், 76 **"आचार्यदेवो भव"** (ஆசார்யதேவோ பவ) என்றும், ஆசார்ய
விஷயத்தில் தேவதாப்ரதிபத்தி பண்ணச்சொல்லி வேதாந்தம்
விதிக்கையாலும், 77 **"गुरुरेव परंब्रह्म"** (குருரேவ பரம்ப்ரஹ்ம)
என்றும், 78 **"आचार्यस्स हरिः साक्षाच्चररूपी न संशयः"** (ஆசார்யஸ்
ஸ ஹரிஸ்ஸாக்ஷாச்சரரூபீ ந ஸம்ஶய:) என்றும் 79 **"एष वै भगवान् साक्षात्प्रधानपुरुषेश्वरः"** (ஏஷ வை பகவாந் ஸாக்ஷாத் ப்ரதாந

§ பெரு-திரு 4-9.

பூதேச்சா) என்றும், 80 "योगीश्वरांश्चमुम्यांश्च लोकोयं मनुते नरः" (யோகீச்வரா விமுக்யாந்யாந் லோகோயம் மநுதே நரம்) என்றும், 81 "साक्षान्नारायणो देवः कृत्वा मर्त्यमयीं तनुम्। मग्नानुद्धरते लोकान् कारुण्याच्छास्त्रपाणिना" (ஸாக்ஷாந்நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும்। மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாச்சாஸ்த்ரபாணிநா) என்கிற இவை முதலான ப்ரமாணங்களிலே ஆசார்யனை அவதரித்த ஸர்வேச்வரனாகப் ப்ரமாணிக்கிறதாலே கேவலம் தன் கருணையாலே சாஸ்த்ரங்களை உபதேசித்து உத்தரிப்பிக்கிறமையும் ப்ரத்யக்ஷமாகச் சொல்லுகையாலும்;

82 "कृतेऽस्मिन्ननुभगवान् त्रेतायां रघुनन्दनः॥ द्वापरे नन्दसूनुश्च कलौ देवः पराङ्कुशः॥" (க்ருதேऽஸ்மிந் பகவாந் த்ரேதாயாம் ரகுநந்த: । த்வாபரே நந்தஸூநுச்ச கலௌ தேவ பராங்குச) என்று ஸர்வேச்வரன் க்ருதயுகத்திலே பரமஹம்ஸனாய் அத்ரி பகவானுக்குப் புத்ரனாய் தத்தாத்ரேயனாய் அவதரித்தாப் போலவும், த்ரேதாயுகத்தில் சக்ரவர்த்தியினுடைய திருமகனாய் அவதரித்தாப்போலவும், த்வாபரயுகத்தில் ஸ்ரீகிருஷ்ணனாய் தர்மதத்வத்தையுடைய சாஸ்த்ரங்களை வெளியிட்டு ஸ்ரீகீதோபநிஷத்துப் புராணம் அவதரிக்கப்போலவும், 83 "क्रूरे कलियुगे प्राप्ते नास्तिकैः कलुषीकृते। विष्णोरंशांशसंभूतो वेदवेदार्थतत्त्ववित्॥ स्तोत्रं वेदमयं कर्तुं द्राविड्या निजभाषया। जनिष्यति सतां श्रेष्ठो लोकानां हितकाम्यया॥" (க்ரூரே கலியுகே ப்ராப்தே நாஸ்திகை: கலுஷீக்ருதே। விஷ்ணோரம்சாம்சஸம்பூதோ வேதவேதார்த்தத்வவித்॥ ஸ்தோத்ரம் வேதமயம் கர்த்தும் த்ராவிட்யா நிஜபாஷயா। ஜநிஷ்யதி ஸதாம் ச்ரேஷ்டோ லோகாநாம் ஹிதகாம்யயா॥) என்று காலத்தின் கொடுமையான கலியுகத்திலே ஸர்வேச்வரனுடைய அம்சாவதாரமாய் தமிழ்த்தேசத்தில் லோகஹிதார்த்தமாக த்ராவிடபாஷையாலே வேதார்த்தங்களை ப்ரபந்தீகரிக்கைக்கு ஸ்ரீ பராங்குசன் திருநாமத்தை உடையராய் ஒருவர் திருவவதரிக்கப் போகிறாரென்றும், 84 "कलौ पुनः पापरताभिभूते स उद्भवत्याश्रितवत्सलत्वात्। भक्तात्मना विश्वजनान् सुगोप्तुं विश्वाधिको

चीश्वमंशो हि विष्णुः॥' (கலெள புந பாபகாரீந்தே ஸ உத் ஸ்வபாந்தலகாந்யாது। பக்தாத்மநா விசலஜநாநாம் வைநிகாந்தும் விசலாதிகோ விஷ்வமயோ ஹரி விஷ்ணு) என்று கல்யுகத்திலும் வைஷ்ணவாநுஷ்டானமாக ஸர்வர்திலுள்ள வர்ணாச்ரமத்திலுள்ள பக்தர்களாக அவதரித்தருளினதாகச் சொல்லுகையாலும், 85 "कलौ खलु भविष्यन्ति नारायणपरायणाः। क्वचित् क्वचिन्महाभागा द्रमिडेषु च भूरिशः॥ ताम्रपर्णी नदी यत्र कृतमाला पयस्विनी कावेरी च महाभागा प्रतीची च महानदी॥ ये पिबन्ति जलं तासां मनुजा मनुजेश्वर। तेषां नारायणे भक्तिर्भूयसी निरुपद्रवा॥" (கலௌ கலு பவிஷ்யந்தி நாராயணபராயணா:। க்வசித்க்வசிந் மஹாபாகா த்ரமிடேஷு ச பூரிச:। தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா பயஸ்விநீ। காவேரீ ச மஹாபாகா ப்ரதீசீ ச மஹாநதீ। யே பிபந்தி ஜலம் தாஸாம் மநுஜா மநுஜேச்வர। தேஷாம் நாராயணே பக்திர்பூயஸீ நிருபத்ரவா) என்று கலிகாலத்திலே வந்து அவதரிக்கும் ஆழ்வார்களை தத்தம் நதிகளிலே பாகவதர் பரிசுத்த, அந்த நதிகளினிலே ஜலபானம் பண்ணுமவர்களுக்கு பக்தி அபிவிருத்தியைச் சொல்லுமிடத்தில், ப்ரதமத்திலே "தாம்ரபர்ணீ நதீ யத்ர" என்று இவரவதரித்த தேசத்தைச் சொல்லுகையாலே, 86 "द्वितीये तु परार्धेऽस्मिन् दिने स्वाद्येऽद्य सत्तमे। मन्वन्तरे वर्तमाने त्वष्टाविंशे चतुर्युगे॥ कलेरादौ मासि राधे काव्यवारे कुलीरके। पौर्णमास्यां विशाखाख्ये तारे महति शोभने। प्रजापतेर्जन्मयामी शठकोप इति स्मृतः। मद्भक्तोऽहं भविष्यामि नेनु द्राविडतां श्रुतिः॥" (த்விதீயே து பரார்த்தேஸ்மிந் திநே த்வாத்யே த ஸத்தமே। மந்வந்தரே வர்த்தமாநே த்வஷ்டாவிம்சே சதுர்யுகே। கலேராதௌ மாஸி ராதே காவ்யவாரே குளீரகே। பௌர்ணமாஸ்யாம் விசாகாக்யே தாரே மஹதி சோபநே। ப்ராஜாபதேர் ஜந்மயாமீ சடகோப இதி ஸம்ஸ்ருத:। மத்பக்தோஹம் பவிஷ்யாமி நேதும் த்ராவிடதாம் ச்ருதீ) என்றும், 87 "ताम्रपर्ण्युत्तरे तटे वान्तक्षेत्रे जनिष्यति" (தாம்ரபர்ண்யுத்தரே தடே தாந்தக்ஷேத்ரே ஜநிஷ்யதி) என்றும், 88 "निनिद्र तिन्त्रिणीशाखं गत्वाऽत्र भुजगाधिपः। सर्वाभिलाषान् सर्वेषां नित्यमेव प्रदास्यति॥ शठकोपमुनीन्द्रत्वं संप्राप्य त्रिदशेश्वरः। ताम्रपर्णीतटं प्राप्य रक्षिष्यत्यखि

स्मान् जनान्॥ अत्र शूद्राः समस्ताश्च द्राविडत्वमुपागताः। वेदयिष्यन्ति वेदेषु सकला अपि माधव॥ ([illegible] த்வம் கதலோத்ர புஜகாதிப। ஸர்வா லோகாந்த ஸர்வேஷாம நித்யமேவ பாதாஸ்யதி। ஸடகோபமுநிச்ரேஷ்டம் ஸம்ப்ராப்ய த்ரிதசேச்வர: । தாம்ரபர்ணீதடம் ப்ராப்ய [illegible] க்தீர்ஜநாந்। அத்ர வேதாஸ்ஸமஸ்தாச்ச த்ராவிடத்வமுபாகதா:। வேதயிஷ்யந்தி வேதேஷு ஸகலா அபி மாதவம்) என்றும், 89 "अस्ति पाण्ड्यमहादेशे कुरुकानगरी शुभा। ताम्रपर्णीनदीतीरे साक्षाद्दृष्टो ह्यधोक्षजः॥" (அஸ்தி பாண்ட்யமஹாதேசே குருகாநகரீ சுபா। தாம்ரபர்ணீ நதீதீரே ஸாக்ஷாத் த்ருஷ்டோ ஹ்யதோக்ஷஜ:) என்றும் சொல்லுகிற படியே அந்த க்ஷேத்ரத்திலே "கல்லார்கவிலக்ருநகூ சிவயுகவர்ணக்ர மத்திலே அவதரித்த ஸர்வேச்வரனுமே §"குடி குடி வழிவந்தாட் செய்யும் தொண்டர்" என்கிறபடியே பூர்வபுருஷர் பகவச்சேஷ பரம்பரையான காரியாரிடத்திலே வந்தவதரித்து "காரிமாறன் சடகோபன்" என்று பரமபதஸ்தரான தாமே அருளிச்செய்யும் படி பரகாயத ப்ராபல்யாகையாலே திவ்யஸூரிகளான ஸ்ரீவாரகாப, ஸாக்ஷாத்காரமான பகவத்தோர்மையை நறுதியிட்டு அவரே பரதேவதை என்று ஸ்ரீமதுரகவிகள் பற்றினார்யிறே.

§"அறியாதன வறிவித்த வத்தா" என்று பகவத்விஷயத்திலே ஆசார்யத்வப்ரதிபத்தி பண்ணினார் நம்மாழ்வார். இவர் ஆசார்ய விஷயத்திலே "தேவு மற்றறியேன்" என்று பகவத்ப்ரதிபத்தி பண்ணுகிறார். ஈச்வரத்வாசார்யத்வங்களாகிற தர்மத்வயங்களும் ஸாபேக்ஷதையாலே வ்யக்திபேதனமான காரணத்தாலே இருவர்பக்கலிலும் இரண்டு ப்ரதிபத்தியும் நடக்கக் குறையில்லை. 90 "श्रीधरायादिगुरवे" (ஸ்ரீதராயாதிகுரவே) என்று ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரனுமே ப்ரதமாசார்யனும், 91 "स चाचार्यवंशो ज्ञेयः। आचार्याणामसावसावित्या भगवत्तः" (ஸ சாசார்யவம்சோ ஜ்ஞேய: । ஆசார்யாணாமஸாவஸாவித்யாபகவத்த:) என்கிறபடியே குருபரம

§ திருவாய் 9-2-1.

னையும் ஜ்ஞாநத்வமாவைகளாலே அந்த பரமபதாபமர்த்தகத்வமும் வைகுண்டமாகையாலே ஸாமாந்யத்தலமுமதன்னைலெ்ரிய அநுப பக்ஷமாகையாலே ஆசார்யவதாரமும் ஈச்வரகர்த்ருகமாகதக

92 "संभवामि युगे युगे" (ஸம்பவாமி யுகே யுகே) என்று வையாலே செய்த ஆசார்யாவதாரத்தைத் தெரிவிவைனைந்து, ஆகையாலே நம்மாழ்வார் பகவதவதாரவிசேஷமாகையாலே அவர் விஷயத்திலே ஸேவித்து ஸ்ரணமான பாரம்யத்தைக்கொண்டு அருளிச்செய்து, ஸ்ரீமதுரகவிகளும் தப்பகிப்பட்டார்க்க குறையில்லை.

இப்படி ஸ்ரீமதுரகவியாழ்வார் பரமேச்வரனாகப் ப்ரதிபத்தி பண்ணின ஆழ்வார் விஷயத்திலே பரமபாவனமான ஈச்வரனுடைய ஸாம்யமான ஆழ்வாரைப் பாகவதனென்று உத்தேசிக்க ப்ரதிபத்தி பண்ணாதே ஜாதியால் ப்ரதிபத்தி பண்ணில் பாவதாதம்யமில் ரௌரவாதி நரகத்திலழுந்துவர்கள் என்ன. 93 "विष्णोरर्चावतारेषु लोहभावं करोति यः। यो गुरौ मानुषं भावमुभौ नरकपातिनौ॥" (விஷ்ணோரர்ச்சாவதாரேஷு லோஹபாவம் கரோதி ய:। யோ குரௌ மாநுஷம் பாவமுபௌ நரகபாதிநௌ) என்று ஆசார்யவிஷயத்திலே மநுஷ்யத்வ ப்ரதிபத்தி பண்ணினவனுக்கு நரகபாதமே பலமாக ஸாஸ்த்ரம் சொல்லாநின்றது. நம்மாழ்வார் பகவதவதார விசேஷமென்னும் ப்ரதிபத்தி தான ஆஸ்திகாக்ரேஸராய பரமாண பத்ருத்ராசாயி நக்கும் இல பாகவதிகர்க்கு நெஞ்சிலே ஊற்றுமாறுமல எப்போதும் நிலைநிற்கும்.

94 "यत्सारभूतं तदुपासितव्यं" (யத்ஸாரபூதம் ததுபாஸிதவ்யம்) என்றும், 95 "भजेत्सारतमं शास्त्रं" (பஜேத் ஸாரதமம் ஸாஸ்த்ரம்) என்றும் சொல்லுகிறபடியே ஸகல ஸாஸ்த்ரஸாரதமமாய் ஸ்ரீமதுரகவிகள் நாதமுனிகள் தொடக்கமான நம் பூர்வாசார்யர்களாலே உபதேசபரம்பராப்ராப்தமாய் ஆத்மாவுக்கு நேரே வருத்த விஷயமாய் ஸ்வதந்த்ரர்பக்திகள் கலசாதே எப்போதும் கருணை வைக்கவேஷமாய் அதிஸுலபமாய் மோக்ஷத்துக்கு ஹேதுவாயிருக்கிற சரமபர்வமான நம்மாழ்வாரையே 96 "उपायोपेयभावेन तमेव शरणं व्रजेत्" (உபாயோபேயபாவேந தமேவ ஸரணம் வ்ரஜேத்) என்கிற

படியே பரமப்ராப்யமாகவும் ப்ராபகமாகவும் பற்றி ஸேவாபரராயிருக்கு மவர்களுக்குப் பேற்றில் கண்ணழிவில்லை.

97 "सिद्धिर्भवति वा नेति संशयोऽच्युतसेविनां। न संशयोऽस्ति तद्भक्तपरिचर्यारतात्मनाम्॥" (ஸித்திர் பவதி வா நேதி ஸம்சயோ(அ)ச்யுதஸேவிநாம் । ந ஸம்சயோ(அ)ஸ்தி தத்பக்தபரிசர்யாரதாத்மநாம் ॥) என்று பகவத்பரமையை ஈச்வரனைப் பற்றினவர்களுக்குப் பேற்றில் ஸம்சயமுண்டு; ததீயபரமான ஆசார்யனைப் பற்றினவர்களுக்குப் பேற்றில் கண்ணழிவில்லை யென்கின்றது. 98 "गुरुमूर्त्यां स्थितस्साक्षाद्भगवान् पुरुषोत्तमः। उत्तारयति संसारात् तदुपायप्लवेन तु" (குருமூர்த்யா ஸ்திதஸ் ஸாக்ஷாத் பகவாந் புருஷோத்தம: । உத்தாரயதி ஸம்ஸாராத் ததுபாயப்லவேந து) என்று அவதார விசேஷமான ஆசார்யனே ஸம்ஸாரோத்தாரகனென்று சாஸ்த்ர ஸங்க்ரஹகர்த்தாக்களுமருளிச் செய்தார்கள்; பரமாசார்யரான நம்மாழ்வாரே ஸம்ஸாரோத்தாரகரென இவர் அறிந்தவர்.

மற்றைய முமுக்ஷுக்கள் இவர்க்குக் கரணத்ரய பாரதந்த்ர்யமில்லாததைப் பற்றுவதால், இவ்வாழ்வார்தாம் அச்சரவதாரமான ஸந்நிதியிலே பூர்வம்மை விலக்ஷணமான வைபவங்களையும் நாத முனிகளுக்குத் திருவாய்மொழியைச் செய்தருளியவராகவே இதரபாவங்களைக் கண்ட ஆழ்வார்கள் இவருக்கு அநுயாயிகளாய் அவையவரென்று குறையில்லை.

இப்படி வைலக்ஷண்யவிலக்ஷணாச்ரய பரமாசார்யரான நம்மாழ்வாரே ஸாக்ஷாத்பகவதவதாரமென்றும், அவர் திருவடிகளே உபாயமாகவும், அவர் திருவடிகளில் பண்ணும் கைங்கர்யம் புருஷார்த்தமாகவும், அவருடைய முகோல்லாஸமே பரமப்ரயோஜனமாகவும், அவரெழுந்தருளியிருக்குமிடமே ப்ராப்யபூமியாகவும், அவருடைய விக்ரஹானுபவமே உணவும் சோறுமெனப்படியே தாரகாதிகளாகவும் ப்ரதிபத்திபண்ணி விசுவஸித்திருக்கும் ஸமாதிநிஷ்டராயிருக்கும் ஸ்ரீமதுரகவியாழ்வார்.

இப்படி சரமபர்வநிஷ்டரான இவர்தாம், ஸ்வாசார்யரான நம்மாழ்வார் பகவத்விஷயத்தில் பண்ணும் ஆஸக்தாதி ப்ரகாரத்தை

இவர் முவர் விஷயத்தில் பண்ணினிறே. எங்ஙனேயெனில், அவர், §"அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுது" என்றார். அத் தோத்திரபாத்திரத்தை ஸ்ரீமதுரகவிகள் தாம், "தென்குருகூர் நம்பியென்றக்கால் அண்ணிக்கு மமுதூறுமென் னாவுக்கே" என்றார். அவர், /"மலைதாரவுடைத்தேத்த" என்றார் இவர் "நாவினால் நவிற்றின்பமெய்தினனே" என்றார். அவர் †"அடிக்கீழமர்ந்து புகுந்தேனே" என்றார். இவர் "மேவினேனவன் பொன்னடிமெய்ம்மையே" என்றார். அவர் f"கண்ணனல்லால் தெய்வமில்லை" என்றார். இவர் "தேவுமற்றறியேன்" என்றார். அவர் ‡"பாடியிளைப்பிலம்" என்றார், இவர் "பாடித்திரிவனே" என்றார். அவர் k"இங்கே திரிந்தேற்கிழுக்குற்றென்" என்றார் இவர் "திரிதந்தாகிலும்" என்றார். அவர், e"உரியதொண்டர் தொண்டர்" என்றார். இவர் "நம்பிக்காளுரியனே" என்றார். அவர் v"தாயப்புத்தகைமையர்" என்றார், இவர் "அன்னையாயத்தனாய்" என்றார் அவர், t"ஆள்கின்றானாழியான்" என்றார், இவர் "என்னையாண்டிடும் தன்மையான்" என்றார். அவர் 1"கடியனொடுகஞ்சனைக்கொன்றபிரான்" என்றார்; இவர் "நக்க சீர்ச்சடகோபனை" என்கிறார். அவர் 8"யானேயென்றனதே யென்றிருந்தேன்" என்றார்; இவர் "நம்பினேன்பிறர்நன்பொருள் தன்னையும்" என்கிறார். அவர், a"அமரர்க்குமேலை ஒப்பும் மாசறுதிறப்பெறுவ" என்றார்; இவர், "இன்றுதொட்டுமெழுமையும்" என்கிறார். அவர், u"என்னுள்நின்று இன்தமிழ்பாடியவீசன" என்றார், இவர் "நின்று தன்புகழேத்தவருளினான்" என்கிறார். அவர் o"நெடுமோயினி வெண்ணெய்தெறிக்க" என்றார்; இவர் "என்றுமென்னையிகழ்விலன் காண்மின" என்கிறார். அவர் r"மயர்வறமதிநலமருளினன" என்றார், இவர் "எண்டிசையுமறியவியம்புகேனொண்டமிழ்ச்சடகோபனருளையே" என்கிறார்.

---

§ திருவாய் 2-5-4.	/ திருவாய் 6-4-6.	† திருவாய் 6-10-10.
f திருவாய் 5-2-7.	‡ திருவாய் 1-7 10.	k திருவாய் 8-10-4.
e திருவாய் 6 9-11.	v திருவாய் 7-8-1.	t திருவாய் 10-4-3.
1 திருவாய் 9-6-11.	8 திருவாய் 2-9-9.	a திருவாய் 2-8-1.
u திருவாய் 7-9-1.	o திருவாய் 1-7-7.	r திருவாய் 1-1-1.

அவர் *"அருளுடையவன்" என்றார்; இவர் "அருள்கண்டீரிவ் வுலகினில்மிக்கது" என்கிறார். அவர் ௨"பேர்ச்சென்னைமறுவலிசெந்த நிறையப்புகுந்தான்" என்றார்; இவர் "நிற்கப்பாடியென்னெஞ்சுள் நிறுத்தினான்" என்கிறார். அவர்]"வழுவிலா அடிமைசெய்யவேண்டு நாம்" என்றார்; இவர் "ஆட்புக்ககாதலடிமைப்பயன்" என்கிறார். அவர் t"ஆராதகாதல்" என்றார், இவர் "ஆட்புக்க காதல்" என்கிறார், அவர் |"பொருளல்லாத என்னைப்பொருளாக்கி அடிமைகொண்டாய்" என்றார், இவர் "பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும் செயல்நன்றாகத் திருத்திப்பணிகொள்வான்" என்கிறார். அவர் f"கோலமலர்ப்பாவைக்கன்பாகிய என்னன்பேயோ" என்றார்; இவர் "தென்குருகூர்நம்பியென்றக்கால்" என்கிறார் அவர் §"உலகம்படைத்தான்கவி" என்றார், இவர் "மதுரகவி" என்கிறார். அவர் ‡"உரைக்கவல்லார்க்கு வைகுந்தமாகும் தம்மூரெல்லாம்" என்றார்; இவர் "நம்புவார்பதி வைகுந்தமகாண்மின்" என்று தலைக்கட்டுகிறார்.

இப்படி ஆழ்வார் பகவத்விஷயத்திலே அநுஸந்தித்த குண விசேஷங்களையெல்லாம் ஆழ்வார் விஷயத்திலே அநுஸந்திக்கும் படிக்கீடாக ஆழ்வார் தம்மை விஷயீகரித்து ஸாமர்த்யம் ஸ்வேஷ்டப்படி பண்ணின நிர்ஹேதுகோபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமில்லாமையாலே, தத்துறுதலைத்தாரத்தாலவத்து செல்லாதபடியான தசை விசேஷத்தைத் தந்தருளிய ஐச்வர்யத்துக்குப் போக்தாவிட்டுப் பகவத்விஷயத்திலும் அதிசயிதமான ஆழ்வாருடைய போக்யதா ப்ரகர்ஷத்தையும், அவருடைய பாசுரமே தேறுபாதரயாம்படி தாரகமானபடியையும், ஆழ்வாருக்கு விஷயமென்று தமக்கு பகவத்விஷயம் உத்தேச்யமானபடியையும், அப்படி உத்தேச்யமாக விரும்புகைக்கடி தம்மை ஆழ்வார் விஷயீகரித்த விஷயீகார மென்றுவதையும், இதாவிய பரிபாலனத்துக்கு பகவத்

* திருவாய் 2-10-11. ௨ திருவாய் 10-8-2.] திருவாய் 3-3-1.
t திருவாய் 2-1-11. | திருவாய் 5-7-3. f திருவாய் 10-10-7.
§ திருவாய் 3-9-10 ‡ திருவாய் 5-3-11.

விஷயத்தில் சீலாதிகளை ஆழ்வார்களையும் ஸ்வரூபமடியான சாதுர்யத்தையும், ஆழ்வார் தம்மை விஷயீகரித்த விஷயீகாரத்தினுடைய தாட்டயத்தையும், தம்மை விஷயீகரிக்கைக்கடியான ஆழ்வாருடைய க்ருபாபாரவஶ்யத்தையும், பகவத்க்ருபையிலும் ஆழ்வாருடைய க்ருபையே இவ்விஷயத்தில் விஞ்சி நிற்குமென்னுமதையும், இப்படி ஆழ்வாருடைய க்ருபை இவ்வுலகில் விஞ்சியிருக்கைக்கடி வேதார்த்தங்களை ஞானமாய் தம்முடைய ப்ரேமமான இப்ரபந்தத்தை என் நெஞ்சிலே ஸ்திரமாக்கினனென்னுமதையும், இப்படி ஆழ்வார் தாம் தமக்கு உபகரித்த உபகாரம் ப்ரத்யுபகார நிரபேக்ஷமாயிருக்குமென்னுமதையும், இப்பத்துப் பாட்டாலே ஸாக்ஷாத்தாக அருளிச்செய்து, இப்ரபந்தம் ஸஞ்ஜீவகமான ஸ்ரீமத்துண்டமென்னும் சொல்லித் தலைக்கட்டுகிறார்.

தம்பிரானபடி அவதாரிகை முற்றிற்று.



ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

கண்ணிநுண் சிறுத்தாம்பின்

முதற்பாட்டுக்குத் தம்பிரான்படி

அவ:—ஆழ்வாருடைய கீர்த்தியபோகத்தைச் சொல்லுகிறது. பரமபதவாஸிகளையான ஆழ்வாரைப்பற்றுமிற இவர் பதமான வதியான பகவத்விஷயத்திலே இழியாவென்னெனில்; ஆழ்வாருடைய போக்யதாதிசயம் தோற்றுகைக்காகவும், அவருடைய முகமலர்த்தி தோற்றுகைக்காகவும் அவருக்கும் பகவத்விஷய மாகையாலும் பேசுகிறார்.

வ்யா —(கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்பண்ணிய) §'உரவிநோடு இணைந்திருந்தேங்கியவெளிவு—எத்திறம்' என்றும், ‡'பிறந்தவாறு' என்றும், ¶''வையவேயேழுமுண்டான்'' என்றும் ஆழ்வார ஆழ்ங்காலபட்ட விஷயமானவன் அதனைப்போக்கினார்.

(கண்ணிநுண் சிறுத்தாம்பு) ஆழ்வார்கள் இவர்களுக்கு உதவிசெய்ததை இருந்தபடி. ஆழ்வாருடைய உத்தேசய வஸ்துவைக் கட்டினதொரு கயிற்றினுடைய உள்ளமை புறமைமையும் படியாய்த்து இவர் கைவெர்த்திருந்தபடி பகவத்விஷயத்தில் (கண்ணித்தாம்பு) என்றது—உடம்பிலே கட்டப்படுகைக்கு உறுத்துமபடி பலபிணைகளையுடைத்தாயிருக்கை. (நுண்தாம்பு) உடம்பிலே அழுந்துமபடி செரிகையிருக்கை. (சிறுத்தாம்பு) இவனைக் கட்டினபின்பு உதலேயே சேர்க்கைக்கு எட்டம் போதாதிருக்கை.

(கட்டுண்ணப்பண்ணிய) உரலோடே சேர்த்து தெதுக்கப்போகாது; அப்போதைக்கு கயிற்றை நெடுக்கிட்டுப்போகாது; இனி இவனை விட்டு நெடியகயிறு தேடிப்பெறுக்கப்புகில பின்னை இவனாரை எட்டான; கைத்தில கடிவதுவேயாகில; இனிச்செய்யவதென?" என்று அவன தட்டமாநுந்திருந்தபடி வைக்கண்டான. (கட்டுண்ணப்பண்ணிய) 48 "सर्वेकरूपरूपाय" (ஸதைகரூபரூபாய) என்கிற தன்னுடைய திருமேனியை நெருக்கி இடங்கண்டு கட்டுமபடி பண்ணினை.

§ திருவாய் 1-3-1. ‡ திருவாய் 5-10-1. ¶ திருவாய் 5-10-3.

கட்டுண்கைக்குப் பரிகரமில்லாமையாலே நிலநுதையுமில்லை பிறந்து படைக்கவொத்த ஆணைக்கயிறுக்குச் சமைந்திருக்கிறது ஆனையாலே திருமேனியிலே இட்ட கோகித்தானை, ‘கண்ணியார் குறுங்கயிற்றாலே கட்ட வெட்டெனவிருந்தான்’ என்று, ‘கண்ணிநுண் கயிறுமுண் கட்டுண்டான்” என்று எல்லாருஞ் சொல்லும் துறையிலே இருக்கை.

45 “दाम्ना चैव” (தாம்நா சைவ) 45 “यदि शक्नोषि” (யதி சக்நோஷி) என்று தாய் கட்டின கட்டை அவிழ்க்க மாட்டாதேயொழிகிறானிறே; 44 “संसारबन्धस्थितिमोक्षहेतुः” (ஸம்ஸாரபந்தஸ்திதி மோக்ஷஹேது) என்று ஸர்வநிர்க்கையுடைய கட்டுகைக்கும் விடுகைக்கும் ஹேதுவானவன் கிடீர் இப்போது தாயாலே கட்டின கட்டை அவிழ்க்க மாட்டாதிருக்கிறான்; செருக்கனான ராவணனுடைய அபிமானத்தின் கையிலே அகப்பட்டு ஒரு கருமுகை மாலையாலே கட்டுண்டால் அதுக்கு ப்ரதிக்ரியை பண்ணமாட்டாதேயிருக்குமாபோலேயிறே, இவன் கட்டினகட்டுக்கு ப்ரதிக்ரியை பண்ணமாட்டாதிருக்கிற இருப்பும் பிறருடைய காமநீயதாமான கட்டு அவிழ்க்குமத்தனையல்லது தன் அதுகா ஒருதாலுகு கட்டு தன்னாலும் அவிழ்க்கப்போகாதென்கை.

ஆழ்வார் “மயர்வற மதிநலமருளப்பெற்றவராகையாலே “உயர்வறவுயர் நலமுடையவன்” என்று அவன் குணத்தை வர்ணித்தார் இவர் முதலடியிலே ஆழ்வார் தம்மைப் பற்றுகையாலே அவன் திருமேனியில் ஸௌசீல்யத்தொடு தம்மையவர்ணிக்கிறார், அவருடைய உத்தேச்யவஸ்து வெளியாக்குகிறது இறே.

அதவா, (கட்டுண்ணப் பண்ணிய) பக்தியுடையாரிலும் அவனுக்கே தன்னையழித்துத் தரவேண்டும்படியாய், இதுவிளையும் சித்தாசித்துக்கமாய்த்து. 58 “नायमात्मेत्यादि-यमेवैष वृणुते तेन लभ्यस्तस्यैष आत्मा विवृणुते तनूं स्वां” (நாயமாத்மே-த்யாதி- யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஸ்தஸ்யைஷ

‡ பெரியதிரு 5-7. || 11-5-9. பெரியதிரு-5.

ஆத்மா விஸ்வாஹுதே தாம்நேம் ஸ்வாமி) என்கிறபடியே, இனி இதை பற்றி இவன் சௌசீல்யபரனைத அநுசந்தித்தான்; /* கட்டு ணுண்டவனும் கவிழ்ந்துள்ள பணைக்கயிற்றுக்கட்டு" என்கிறபடியே கட்டுமிரண்டு, பதராய் பகலிப்பசையானைபா, கட்டுண்டு திருவயிறு மாய், அதற்கேற்பதல, இரண்டுண்டு வாக்குத வடைமாய், அதற்கேற்பதல வசீகரித்துவனவடிமாம். அல்லது கட்டுமிரண்டுமிதியாதாகக் கக்கட்டப்பட்டார்.

இவனதனைக் கட்டுவது "ஒரு வெண்ணெய்யைக் களவு கண்டான், வனை மூலையிலே கடத்திநான்" என்றிறே. இவன் "ஸாமாந்யமன்று இதீபிடெல்லாமிடும்மேனே" என்றிருந்தான். அதாவது களவிலே தக்கேணநினைபடி, இவ் கட்டிலைத்து அடிகைப் புக்கவாறே † "தொழுதையா" என்கிறபடியே தொழுதிடொடங்கும் எல்லாரையும் தொழுவித்துக்கொளளுமவனிறே தொழுகிறான்; இதனாலே அபிமதவிதத்திற்கு ஓராஞ்சலியே ஸாதனமென்றறிய மனனிறே.

45 "दाम्ना चैवोदरे बद्ध्वा प्रत्यबध्नादुलूखले। यदि शक्नोषि गच्छ त्वम्" (தாம்நா சைவோதரே பத்வா ப்ரத்யபத்நாதுலூகலே। யதி ஶக்நோஷி கச்ச த்வம்) தான் தாயான பரிவுதோற்ற இவனை வனிலேகண்டுபிடித்துத் தாயபாலே உரலோடே அடுத்துக்கட்டி மறுவணணியும் பொத்தி, "நீ வைவொல்லிலே போகவொண்ணாது" என்று உருக்கிவிட்டால போகமாட்டாமேதயிருக்கும். 99 "पारम्य शक्तिर्वि-विधैव श्रूयते" (பாரம்ய ஶக்திர்விவிதைவ ச்ரூயதே) என்று ஓதப்படு கிறவஸ்து இவளுக்கெளிதானபடியிறே இங்ஙனே சொல்லுகிறாள். 45 "अतिचञ्चलचेष्टित" (அதிசஞ்சலசேஷ்டித) துறுதுறுக்கையாய்க் கொண்டு வார்த்தை விளைத்தவனல்லியோ? 45 "इत्युक्त्वा" (இத்யுக்த்வா) ஒருசொல்லாலே விலக்கிட்டு வைத்து. 45 "अथ निजं कर्म सा चकार" (அத நிஜம் கர்ம ஸா சகார) அவள் தப்பாது கடைவதாகத் தொடங்கினாள். 45 "कुटुम्बिनी" (குடும்பிநீ) இவனைப்போலே நியமிக்கவேண்டுவன அநேகமுண்டிறே இவளுக்கு.

/ திருச்சந்த-83. † பெரு-திரு 7-8.

(பெருமாயன்) ஸ்ரீதேவகீபுத்ரனை, இத்தால் அவனுடைய ஸௌலப்யத்துக்கு ஒருகரையுண்டாய், அதுகொண்டு ஸுந்தரனைப் போலே கலியாகிற வழியிலாவழியே இழிந்து ஸர்வசக்தியான தான் அதுகொண்டு நிலைகட்ட மாட்டாதே வயதுகையதாக அகப்பட்டுக் கட்டுண்டு /"எட்டேணிதன்னிலும்" என்று உடம்பு வெளுத்த நிறத்திலேனவும் செல்லநின்றார். (எனப்பனில) ஆழ்வார் இவர்க்கு உத்தேச்யராய் கிடக்க, இவ்விலே சொல்லுவான் ஒன்னென்னில், பகவத்பாரதம்ய வார்த்தை சொன்னாரில ஆழ்வாரோட்டை ஸம்பந்தத்தை அதுக்கு கொண்டாரமத்தின கிறே; அதனாலேசொல்லுகிறார்; அதவா, 15 "पुंसां हरिश्चित्ता-पहारिणं" (பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்) என்கிறபடியே அவனுக்கு போவாரையும் துவக்கவல்ல விஷயமாகையாலே துவக்குண்டு சொல்லுகிறாரகவுமாம்.

(என்னப்பனிலன்னனி) பகவத் விஷயத்தில் நம்மாழ்வார்களை விட்டு; ஸம்ஸாரி விஷயப்ரவணங்களை விட்டு பகவத்விஷயத்தைத் தொட்டுகைபிறுண்டான அருமை போலன்று ப்ராதமிகரான பகவத்விஷயத்தை விட்டுப் புருஷார்த்தத்தில சரமாவதியான ததீயசேஷத்வத்தைத் தொடுகை. ஸம்ஸாரிவிஷயங்களை விடலாம் அதின் தோஷதர்சநத்தாலே அங்கு; இங்கு அங்ஙனொரு தோஷம் காண விரகில்லை; ஆகையாலே அதிலும் இது அரிது.

(தென்குருகூர்நம்பி, †"நலமிவென்னிவிடானம்பி" என்னும் ஆழ்வார் தாம் உத்தேச்யமாகப் பற்றின விஷயத்தின் பூர்த்தியன்றிறே இவர்பற்றின விஷயத்தின் பூர்த்தி; எங்ஙனேயென்னில், பகவத்விஷயத்தைப்பற்றினால் அதிலொன்றுமில்லையான ஆழ்வாரனவும் வாவேண்டியிருக்கும். ஆழ்வாரைப் பற்றினால் அவ்வருக்கு கர்த்தவ்யமில்லையிறே. ஆசார்யர்களை நம்பியென்னக்கடவதாக ஸ்ரீமதுரகவினிறேயென்று ஜீயருளிச்செய்வர். (என்றக்கால்) மற்றோராக்காலங்கள் கூறாம் வேண்டியிருக்கும் பகவத்விஷயத்துக்கு; நிருத்திமாத்ரமேயமையும் இவ்விஷயத்துக்கு; பூர்த்தியால் வந்த ஏற்றமேயன்று, ஸௌலப்யத்தாலுமேற்றம் உண்டென்கை.

/ திருவாய் 5-10-8. † திருவாய் 1-10-8.

(அனன்யார்ஹ) இத்யாதி, பகவத்விஷயத்தை அநுபவிக்க ஆழ்வாருக்குப் பிறந்த மேன்மை உவமிக்கத்தக்க ஜ்ஞாநத்தாலே எனக்கு லபித்ததே. (அமுதமாம்) அமுதமாம் ...; 46 "ந ச புனராவர்த்ததே" (ந சபுநராவர்த்ததே) என்ற விஷய ஆழ்வாருக்குக் கைப்பற்றாலே நித்யமாய்ச் சொல்லுமாப் போலே எனக்கும் ஆழ்வார் ப்ரஸாதத்தாலே நித்யஸூரிகளாய்ச் செல்லப்பெற்றேன்.

(எனக்காகவே) இது பின்னை என்றறுக்கு ஸ்வீகரித்திலேயி வென்னில், முதலடியான பகவத்விஷயமே ஸ்வீகரித்து உன்னுக்கு அதிசயிப்பில்லை நிறைந்தவனுக்கு ஸ்வீகாரமாபோலே ஸ்வீக்குமோ? (எனக்காகவே) அநாதியாக விஷயாந்தரங்களை ஸ்வீகரித்துப்போந்த எனக்காகவே இவ்விஷயம் ஸ்வீகரித்தேனாமா.

முதற்பாட்டின் தமிழ்ப்படி
முற்றிற்று.



ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

கண்ணிநுண் சிறுத்தாம்பின்

இரண்டாம் பாட்டுக்கு

ஈஞ்சீயர் வ்யாக்யானம்.

2 நாவினால் நவிற்றின்ப மெய்தினேன்
மேவினேனவன் பொன்னடி மெய்ம்மையே
தேவுமற்றறியேன் குருகூர் நம்பி
பாவினின்னிசை பாடித்திரிவனே.

அவ:—இரண்டாம்பாட்டு ஆழ்வாருடைய ஏற்றம் ஒருக்தியாலே இரசரீரத்தோடே அநுபவிக்கவாமென்கிறார்.

வ்யா:—(நாவினால் நவிற்று) 100 "मनः पूर्वो वागुत्तरः" (மந: பூர்வோ வாகுத்தர) என்கிறவதுவும் வேண்டாவிறே இங்குத்தைக்கு. எல்லாக் கரணங்களால் ப்ரவர்த்திக்கிறார் பெறும் பேற்றைக்காவும் இவர் வாக்கொன்றுமே பெற்றது. 101 "प्रत्यक्षे गुरवः स्तुत्याः" (ப்ரத்யக்ஷே குரவஸ்ஸ்துத்யா:) என்கிறபடியே பகவத்விஷயத்தில் உபகாரகரை எதிரேதாமாயின் ஹைக்கன்றோ நாக்கு கண்டது: ஈச்வரன் வருமடித்த லாபமும் பெற்றேனென்கிறார். (இன்பமெய்தினேன்) ரஸத்தினல்லவை பற்றினேன் *கதி பட்டோடும் சுடர்ச்சோதி வெள்ளம் அரைவயிற்றவனுமபடியிறே இவர் பெற்றபேறு.

இவர்பெற்றலாபமென்னென்னில் (மேவினேனவன் பொன்னடி) ‡"தோலமாமென் சென்னிக்குன் கமலமன்ன குரைகழல்" என்றும், §"தளிர்புரையும் திருவடியென தலைமேலவே" என்றும் சொல்லுகிறபடியே எல்லாம் இவர்க்கு இல்லைகிறது. (மெய்ம்மையே) இது எதத்தனேகுளிக்கு விருகுமென்னில. 102 "विज्ञापनमिदं सत्यं" (விஜ்ஞாபநமிதம் ஸத்யம) என்கிறார். ¶"இமையோர்தலைவா மெய்நின்று" என்றார் ஆழ்வார் 'குருகூர்நம்பி பொன்னடி மேவினேன் மெய்ம்மையே" என்கிறார் இவர்.

(தேவுமற்றறியேன்) தேவன்டாவென்கிறேனன்று, வ்யுத்பத்தியில்லாமை, 101 "भावो नान्यत्र गच्छति" (பாவோ நாந்யத்ர கச்சதி)

‡ திருவாய் 4-8 6. § திருநெடு-1. ¶ திருவி-1.

"அக்ஷத்ர" என்றுபோலே "மறந்தியேன்" என்கிறார். விட்டவிஷயத்தின் பேர் சொல்லாமைக்கு. (நாநக்கத) ஆழ்வாரையுமாதத்தை அவருக்கு ஆச்ரயணீய வஸ்துவையும் உகக்கும்படியன்றிதே ஆழ்வாருடைய பூர்த்தியிருக்கும்படி.

(பாவினின்னிசை) பாவிலே பூண்ட இனியவிசை; ஐச்வர்யத்தை அல்பாஸ்திரமென்று கழித்து, மதுரமான ஆத்மப்ராப்தியை அபுருஷார்த்தமென்று கழித்து, ஸ்திரமாய் பரமபோக்யமுமான பகவத் ப்ராப்தியை ப்ராப்யத்தில் ப்ரதமாவதி என்று கழித்து, இதில் சரமாவதி யான ஆழ்வாரையும் உத்தேச்யரன்று என்றுகழித்து, அவரோடு ஸம்பந்தித்த விஷயத்தையும் ஸாச்ரயமன்று என்றுகழித்து, அத்தோடு ஸம்பந்தித்த இசையே எனக்கு உத்தேச்யமென்கிறார். [1] "தெய்வத்தண்ணந் துழாய்த் தாராயினும் தழையாயினும் தண்கொம்பதாயினும் கீழ்வேராயினும் நின்ற மண்ணாயினும் கொணர்ந்து வீசுமினே" இத்யாதியிற்படியே பகவத்ஸம்பந்தம் போகப்போக சிறப்பெறுகிறபடி. (பாடித்திரிவனே) தலையாயசேவை பண்ணித் திரிவாரைப்போலே. இதுதானும் இவருக்கு தாரகமாய் ஸஞ்சரிக்கப்பண்ணுகிறது.

இரண்டாம்பாட்டு

கருசிகர் வ்யாக்யானம் முற்றிற்று.

---

[1] திருவிரு-53.

நம்பிள்ளை ஈடு.

அவ.—இரண்டாம்பாட்டு. ஆழ்வாருடைய பாசுரமே தமக்கு தேறும்தரையாம்படி தாரகமானபடி சொல்லுகிறார்.

வியா:—(நாவினால் நவிற்றின்ப மெய்தினேன்) "எனைநாளும் இன்னிசைத்த மதுர அமுது" என்று ப்ரஸ்துதமான தன்னையே அநுபவிக்கிறார். (நாவினால் நவிற்று) மான்ஸமாக ஸாக்ஷாத்காரமில்லையென்கிறார். 101. "प्रत्यक्षे गुरवः स्तुत्याः" (ப்ரத்யக்ஷே குரவஸ்ஸ்துத்யா:) என்கிறபடியே பகவத்விஷயத்திலுபகாரகரை ஸ்தோத்ரம் பண்ணக்கடவதென்னும் அந்தக் கார்யம் கொள்ளப்பெற்றேனென்கிறாரென்னவுமாம்; ஈச்வரன்கடைக்கு பாவோஜ்ஜகம் கொள்ளப்பெற்றேன் என்றுமாம் சொல்லுகிறார்.

(இன்பமெய்தினேன்) § "விண்ணினைப்பமிகவெல்லா நீசேர்தனையேமேவிலே" என்று ஆழ்வார் அவ்விஷயத்தில் பெறாதபேற்றை இவ்விஷயத்தில் உக்திமாத்ரத்தாலே பெற்றேனென்கிறார். ஒரு காரணத்தாலே ஒரு பாபத்தைப்பண்ணினால் ஒருகாலம் நரகாநுபவம்பண்ணினால், கல்பாந்தாமும் நரகாநுபவம் பண்ணவேண்டும்படியாயிருப்பது; அப்படிக்கு போக்யமான காரணத்தாலே கீர்த்தி ஸம்பாதத்தை ப்ராப்தேன்.

(மேவினேன்அவன் பொன்னடி) ஆழ்வாருடைய ஸ்ரீருஜவீயமான திருவடிகளே உத்தேச்யமாகப்பொருந்தினேன்; ப்ராப்தனேனென்னவுமாம்; எங்ஙனே பொருந்தினபடியென்னில், மெய்ம்மையே பொருந்தினேன்; இவரை உபகாரகோடியிலேயாக்கி வேறொரு உத்தேச்யமாக்க கிட்டினவாறே அதிலே தோள் மாறும்படியன்றிக்கே ஆழ்வார் திருவடிகளே உத்தேச்யமாகப் பொருந்தினேன்; இத்தைக்கும் நான் அநுஜ்ஞாதனுபாத்தாலே உபகாரகராகவும் பகவத்விஷயத்துக்குப் புருஷகாரமாகக் கொண்டு, அவர்களே சென்னால 103 "यत्र पूर्वे साध्याः सन्ति देवाः" (யத்ர பூர்வே ஸாத்யாஸ் ஸந்திதேவா:) என்கிறபடியே

§ திருவாய் 4-5-8.

லாதவனில நத்திருபத்தாலே உத்தேசபரக்குமும் இவர் தமக்குமே பற்றியேன

(தேவு மற்றறியேன்) ஆழ்வாரைப் பெரிய வேறொரு ஆச்ரயணீய வஸ்து உண்டென்றறியேன். 'மெய்மையே' என்றதிடம் அந்வயத்தாலே சொன்னார். ''தேவுமற்றறியேன்'' என்கிறதிடம் வ்யதிரேகத்தாலே சொல்லுகிறார். ''மற்றறியேன்'' என்கிறது எதனையென்னில், கீழ்ச்சொன்னவற்றை எல்லாமொழிகிறார். இச் சாய்ப்பெண்ணை, ஆகாசப்பெண்ணை, அகத்துறைவிட்டு, பகவல்லபத் தானிலும் நிலாதே அதிலெல்லையான ஆழ்வாரளவும் போந்தாரானபோதே அவற்றையெல்லாம் நீக்குகிறார்.

(குருகூர்நம்பி) இவரையும் பற்றி வேறேயொரு வஸ்துவையும் பற்றும்படியோ இவருடைய பூர்த்தியிருப்பது? "குருகூர்நம்பி" என்றது கண்ணிநுண் சிறுத்தாம்பென்னுதல்; திருவாய்மொழி யென்னுதல். திருவாய்மொழிதனில் "குருகூர்ச் சடகோபன்" என்றன்றே. அவ்வழியாலேயாய்த்து திருவாய்மொழிதன்னையும் இவர் தரிப்பது.

(பாவினின்னிசை) இயலோடே சேரப் புணர்ப்புண்டவின்னிசை. (பாடித்திரிவனே) உம்முடைய தேஹயாத்ரை நடப்பித்துப் போரும்படியென்னென்னில்; பரிதிபச்சரிதனுப்ப கொண்டு இவற்றைச் சொல்லி இதுவே காரகமாக அதனாலே ஸஞ்சரிப்பன. (பாடித்திரிவனே) /"நமன்தமர் தலைகள் மீதே நாவலிட்டுழி தருகின்றோம்" என்று என்னுடைய கதியை நந்திவைப் பண்ணவல்லாருண்டோ? என்றுமாம்.

இரண்டாம் பாட்டுக்கு ஈம்பிள்ளைசொடு முற்றிற்று.

/ திருமாலை-1.

பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்.

அவ:—இரண்டாம்பாட்டு. முதற்பாட்டில் ஆழ்வார் என்றால் தமக்கு ரஸிக்கிறபடி சொன்னார்; இப்பாட்டில் அவருடைய பாசுரமே தேஹயாத்ரையாம்படி தாரகமானபடியைச் சொல்லுகிறார்.

வ்யா.—(நாவினால் நவிற்றின்பமெய்தினேன்) "என்றக்காலண்ணிக்கும்" என்று ப்ரஸ்துதமானதை அநுபாஷிக்கிறார். அதிலுண்டான ஆதராதிசயத்தாலே; மகளைத்துணைக்காரமில்லாத உக்திமாத்ரமடியாக நிரதிசய ஸுகம் பரமப்ரயோஜனமானுடைய அனுபவத்தை தவிராதிறே. (நாவினால் நவிற்று) மகள்ஸுகார மில்லையென்கிறார். பகவத்விஷயத்திலுபகாரகரை ஸ்தோத்ரம் பண்ணக்கடவ நாவைக்கொண்டு அநுக்ஷார்ப்பத்தைக் கொண்டு பெற்றேனெனவுமாம். 101 "प्रत्यक्षे गुरवः स्तुत्याः" (ப்ரத்யக்ஷே குரவஸ்ஸ்துத்யா:) என்னைக்கடலத்திறே நச்வர ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜனம் கொள்ளப்பெற்றேன் நாவின்றுவதுமே என்கிறார்.

அரு—இரண்டாம்பாட்டு, ஸங்கத்யர்த்தம் வ்ருத்தவர்த்திஷ்யமான ஸேத்தகம (முதற்பாட்டிலித்யாதி) இப்பாட்டில் ஆழ்வாருடைய போக்யதையையும் அநந்தரம் தத்ஸம்பந்தத்தையுடைய ப்ரபந்தமே தமக்கு தாரகமென்பதையும் சொல்லுகிறாரென்று கருத்து. (அவருடைய பாசுரம்) என்றது—திருவாய்மொழியும் கண்ணிநுண் சிறுத்தாம்பும் ஸம்பந்த ஸாமாந்ய வ்யபதேசமாகையாலே. தேஹயாத்ரையாம்படி என்றதை விவரிக்கிறார் (தாரகமானபடியை) என்றவிதில.

"பாடித்திரிவனே" என்றதைப்பற்ற, "என்றக்கால்" என்றதோடு புநருக்ததமன்றோ என்னவருளிச்செய்கிறார் (என்றக்காலித்யாதி) ஆதராதிசயத்துக்கு அடி அருளிச்செய்கிறார் (மகளைத்துணைக்காரமித்யாதி) (நிரதிசயஸுகம்) என்றது "என்னப்பனில் அண்ணிக்கும்" என்றதைச் சொல்லுகித்து. "நவிற்று" என்று சொல்லுகையாலே நா அர்த்த ஸித்தமாயிருக்க, "நாவினால்" என்று சொல்லுவானேனென்ன அருளிச்செய்கிறார் (மாத்ரயாதி) நைரபேக்ஷ்யம் சொல்லுகையன்றிக்கே 'நாவுண்டு' என்று ச்லாக்யார்த்தமென்கிறார் (பகவதித்யாதி).

(இடமெய்த்தினை) ‡"விகிலின்பமிகவெலகிலேகேழ்ந்தனன் மேனி" என்ற ஆழ்வார் அவஸ்தையிலே பெறாப்பேற்றை இவ விஷயத்திலே பெற்றேன் என்கிறார். †"சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும்" என்று கரணத்ரயங்களாலும் அவ்விஷயத்தை ஆச்ரயித்தவர் பெறாப்பேற்றை உக்திமாத்ரத்தாலே பெற்றேன். அநாதிகாலம் நரகத்திலே ஸ்நகடியும் நரகத்திலே ஸமுஹராமுமாம்படி பாபத்தைப் பண்ணிப்போந்த காலமேலே சீதி ஸாகரத்தை ப்ராபித்தேனெனவுமாம்.

(மெய்ம்மையை பொன்னடி) ஆழ்வாருடைய ஸ்பாருஹநீயமான திருவடிகளோடேதேச்யமாகப் பொருந்தினேன். 10 "ஸிபாமி" (க்ஷிபாமி) என்ற ச்லோகமும் கூட உபேக்ஷித்த தசையிலே

உபகாரகனே ஸ்துதிக்க வேறுமோரவென்ன அருளிச்செய்கிறார் (பரத்யபேக்ஷையாதி) நாப்படைத்த ப்ரயோஜநம் பெற்றனென்ன வேதில்கீழோவென்ன "விசித்ரா தேஹஸம்பத்தி" இத்யாதி வசநத்தை உட்கொண்டருளிச்செய்கிறார் (சர்வரேத்யாதி.) நாவினுல் நவின்று இன்பம்பெறுகுருகாடோவென்ன "இசை மாலைகளேத்தி மேவப் பெற்றேன்" என்றதைக் கடாக்ஷித்து "நாவினுல் நவிற்றின்ப மெய்தினேன்" என்று ஸமுதாய தாத்பர்யமருளிச்செய்கிறார் (விமிலின்ப மிதயாதி) இழ உக்திமாத்ரத்தால்வந்த ஆநந்தம் ஆழ்வாருக்கு ஸமமென்றருளிச்செய்து அவருக்குக் கரணத்ரயம் வேண்டிற்று இவருக்கு ஒன்றேயமைந்ததென்று தாத்பர்யார்த்தமருளிச்செய்கிறார் (சிந்தையாலு மிதயாதி.) "நாவினுல்" என்றதுக்கு நைரபேக்ஷ்ய ஸ்வாபாதமேயாக மன்றிகே தாத்பர்யார்த்தமருளிச்செய்கிறார் (அநாதிகால மித்யாதி.)

அநந்தக்லேசபாஜநமான ஸம்ஸாரத்திலிருக்கிற நானெல்லாம் ஈச்வர னுபேக்ஷித்தானென்றும் அவ்வளவில் ஆழ்வார் தம்மைக்கடாக்ஷித்தாரென் றும் திருவுளமாகக்கருதி தாத்பர்யகதநமுகேந ச்லோகவ்யாக்யானம் (க்ஷிபாமீத்யாதி) பரமகாருணிகராகையாலும் அநாதியான ஸம்ஸாரத்தல் பாதகுச்சிகாதிகள் ஸம்பாவிதங்களாகையாலும் சேதநருக்கு "க்ஷிபாமி" என்று அவன்சொன்னது அஸ்ருதயோத்தியாய், அச்சமுற்றத்திலுனித் தன்னென்று திருவுள்ளமபற்றி (உபேக்ஷித்ததசை) என்றது.

‡ திருவாய் 4-5 3. † திருவாய் 6-5-11.

விஷயீகரித்த ஆழ்வாருடைய விலக்ஷணமான திருவடிகளோடே பொருந்தப்பெற்றேன். நீ செய்தருளாகில பேறாய் ஆறுதிய படி ஆர்தபடி வெண்மையை, (மெய்மையே மேவினேன்) உப காரக விஷயத்திலே கிறந்தவளவிலே வேறொரு விஷயம உத்தேசமாய், அது கிடைக்குமிடம் அதிலே தோளமாம்படி வளரிக்க ஐஸ்வர்யமுகுமிக்ககளிரண்டும் ஆழ்வார் திருவடிகளே யாகப் பொருந்தினேன். இவ்விருக்கரை அநுஜ்ஞானுராபத்தாலே உபகாரகராகவும் பகவல்லாபத்துக்குப் புருஷகாரமாகவும், கீதை விபூதியில 103 “यत्र पूर्वे साध्याः सन्ति देवाः” (யத்ர பூர்வே ஸாத்யாஸ் ஸந்தி தேவா) என்கிறபடியே ப்ராப்யமாகவும இவர் தம்மையே பற்றினேன. ஆளவந்தார் 105 “अत्र परत्र चापि” (அத்ர பரத்ர சாபி) என்கைக்குமடி இவரிறே.

(தேவுமற்றறியேன) ப்ராப்யமும் ப்ராபகமுமான வேறொரு வஸ்துவுண்டென்றறியேன். “மெய்ம்மையே” என்றவிடம அர்த்தத்தாலே சொன்னார், “தேவுமற்றறியேன” என்று வ்யதிரேகத்

உபகாரகரென்று ஆழ்வாரை நீ பற்றினீராகிலும உமக்குப் புருஷார்த்தமேதென்கிற சங்கையைய நுவதித்து நால இதுவரை உபகாரகத்வேன பற்றி வேறு பலங்களிலே போகிறவன்றிக்கே நியதமாக ஸகலபுருஷார்த்தங்களும் ஆழ்வார் திருவடிகளாகவே பற்றினேனென்கிறு அருளிச்செய்கிறார் (நீ செய்தருளாகில) (மெய்ம்மையே) நியமமாக. “மெய்ம்மை என்றது” “அவன் பொன்னடி மெய்ம்மைனே” என்றத்தை அநுஸந்தித்தாரென்று கண்டுகொள்வது. 2 (ஸர்வம் யதேவ நியம) என்கிறபடியே ஸகல பலங்களும் திருவடிகளே யென்று அருளிச்செய்து ப்ராப்ய ப்ராபகங்களை யோஜநாந்தரம (இவ் விருந்தவித்யாதி). இத்தைப்பற்றியிறே அபியுக்தரும் அருளிச்செய்தாரென்று ப்ரமாணம் காட்டுகிறார் (ஆளவந்தாரித்யாதி)

மெய்ம்மையென்றது இரண்டாம் யோஜனையில் ப்ராப்யமும் ப்ராபகமுமென்று சொல்லியிருக்க, புந: “தேவுமற்றறியேன்” என்று சொல்லவேணுமோ என்கிற சங்கையைப் பரிஹரிக்கிறார் (மெய்ம்மையே என்றவிடமித்யாதி). “ஸகலபலங்களும் ஆழ்வார் திருவடிகளைப் பற்றினேன்” என்ற ப்ரதமயோஜநாநுகுணமாகத் தாத்பர்யார்த்த

தாலே சொல்லுகிறீர் தம்முடைய அநுபவங்களைத் தோற்றுகைக்காக. "மறந்தறியேன்" என்று புருஷார்த்தாந்தரம் களோபாதி பகவத்விஷயத்தையும் கழிக்கிறீர். அதிலேயான ஆழ்வார் திருவடிகளையும் மக்தலர்களையாலே, மோக்ஷ லாபமாவதாதல், ஆசார்யோபதேசத்தாலேயாதல் சொல்லுகிறிலர். உபகாரகரான ஆழ்வார் திருவடிகளில் பாவபந்தத்தாலே சொல்லுகிறீர்.

(குருகூர்நம்பி) இவரையும் பற்றி வேறொரு விஷயத்தையும் பற்றவேண்டுமோபடியோ இவருடைய பூர்த்திரும்படி; "குருகூர்நம்பி" என்றது ஆழ்வார் திருவாயாலே அருளிச்செய்த தென்றுப்பது திருவாய்மொழிதனையும் தரிப்பது. அதிலே "குருகூர்ச் சடகோபன்" என்றருளிச்செய்தாரிறே அவதரியாலேயாயிற்று திருவாய்மொழியிலாதர, ஆழ்வார் பரிபாதய

மருளிச்செய்கிறீர் (மறந்தறியேனித்யாதி). முந்தின யோஜனையிலே ப்ராபக ஸாதனத்வேந "தேவு" என்று ஸர்வேச்வரனை சொல்லுகிறது; இரண்டாம் யோஜனையில் ப்ராப்யவைத்துலைச் சொல்லுகிறது ஈதரங்கள் எம்பெருமானை ப்ராப்யப்ராபகங்களாகச் சொல்லி ஆசார்யோபதேசமுமபடியேயிருக்க இவிப்படி கழிக்கைக்கு ஹேது வே தென்ன அருளிச்செய்கிறீர் (சாஸ்த்ரேத்யாதி).

நீர் ஆழ்வாரையொழிய "தேவுமற்றறியேன்" என்கிறதுவாகில் *முகில்வண்ணனடிமேல் சொன்னசொல் மாலையாயிரமான திருவாய்மொழியை அப்யஸிப்பாரிலவனென்கிற சங்கையிலே அருளிச்செய்கிறீர் (இவரையென்று தொடங்கி திருவாய்மொழியிலாதரமென்றளவும்) (பூர்த்தியிருப்பது) என்றவனந்தரம் "ஆசையாலே" என்றுகூட்டி "அறிப்படுது" என்றதோடு அந்வயிப்பது. ஆழ்வார் திருவாயாற்சொன்னதுக்கு ப்ரமாணம் (அதிலேயித்யாதி). இதுக்கு ‖"பரனடி மேல் குருகூர்ச்சடகோபன்சொல்" இத்யாதிகளிலே நோக்கு. §"என்முனசொல்லும்" என்றும் /"தன்னைத்தானே துதித்து" என்றும் எம்பெருமான் சொல்லாகத்தோற்றுகையாலே ஆழ்வார் சொல்லென்று அர்த்தம் சொல்லக் கூடுமோவென்ன, குருகூர்நம்பி விஷயமான பாவென்றதாகநாமருளிச்செய்கிறீர் (ஆழ்வாரித்யாதி).

‖ திருவாய் 1-1-11. § திருவாய் 7-9 2. / திருவாய் 10-7 2.

ராகையாலே "குருகூர்நம்பி" என்று கண்ணிநுண்சிறுத் தாம்பைச் சொல்லுகிறதென்னவுமாம்.

(பாவினின்னிசை) பாவோடே கூடப் புணர்ப்புண்ட இனிய இசை. (பாடித்திரிவனே) உம்முடைய தேஜஸ்ஸைக் கடந்திய போருபடி வெண்ணென்ன, பரிதிப்பேசித்துறைக்கொண்டுசொல்லி இதுவே தாரகமாக ஸஞ்சரிப்பவன். 'உண்டு திரிவன' என்னுமா போலே "பாடித்திரிவன" என்கிறார். /"நமன்றமர் தலைகள் மீதே நாவலிட்டுழிதருகின்றோம்" என்னுமாபோலே இதுவே யாத்ரையாயிருக்கிற என்னுடைய கதிநிவ்ருத்தியைப் பண்ண வல்லாருண்டோ என்றுமாம். ப்ராக்தனகர்மபலாநுபவத்தைப் பண்ணுவிக்கும் யமன் கதிபங்கம்பண்ணவோ? அதுக்கடியான விஷயாந்தரங்கள் கதிபங்கம்பண்ணவோ?

இரண்டாம் பாட்டு பெரியவாச்சான்பிள்ளை
வ்யாக்யானம் முற்றிற்று.

பாவென்று சந்தஸ்ஸையுடைத்தான ப்ரபந்தமாய், இதுக்குச் சேர்ந்த அநுரூபமாய் மநோஹரமான கானமென்றர்த்தம் அருளிச்செய்கிறார் (பாவோடித்யாதி) "பாடித்திரிவன" என்றதுக்கு இரண்டு தாத்பர்யம். பாடுகையை திரிகைக்கு ஹேதுவாக்கி தாரகமாகவும் பாடுகையாலே அப்ரதிஹதஸஞ்சாரமாகவும், அதில் முந்தினதை ஸங்காபரிஹாரமுகேந அருளிச்செய்கிறார் (உம்முடையவித்யாதி). இரண்டாம் தாத்பர்யம் (நமன்றமரித்யாதி). (நமன்) யமன். தமர்–அவனுடைய தூதர். நாவலிடுகை–ஜயித்தவர்கள் தோற்றவர்கள் வாசலிலே சென்று அறை கூறுகை. (உழிதருகை) ஸஞ்சரிக்கை. (யாத்ரையாக) வ்யாபாரமாக. கதிநிவ்ருத்தியைப் பண்ணவல்லாருண்டோ என்றத்தை விவரிக்கிறார் (ப்ராக்தநேத்யாதி) (அதுக்கு) கர்மத்துக்கு.

இரண்டாம் பாட்டு
வ்யாக்யான அரும்பதம் முற்றிற்று.

/ திருமாலை-1.

அழகியமணவாளப்பெருமாள் நாயனார் வ்யாக்யானம்

—(o)—

அவ:—இரண்டாம் பாட்டு. (ஆழ்வார்களித்யாதி) ஆழ்வார்கள் பகவத்விஷயத்திலே ஆசார்ய ப்ரதிபத்திபண்ணிப்போந்தார்கள்; இவர் ஆசார்யவிஷயத்திலே பகவத்ப்ரதிபத்திபண்ணிப் போருகிற வாயத்து. பகவத்விஷயத்திலும் ஆழ்வாருக்குண்டானவாசி —
45 "यदि शक्नोषि गच्छ त्वमतिश्चलचेष्टित। इत्युक्त्वाथ निजं कर्म सा चकार कुटुम्बिनी" (யதி ஶக்நோஷி கச்ச த்வமதிசஞ்சலசேஷ்டித। இத்யுக்த்வாத நிஜம் கர்ம ஸா சகார குடும்பிநீ) என்கிறபடியே இடைச்சி கட்டி 'வலியனாகில் என் கட்டினை அவிழ்த்துப் போய்க்காண். உன் திருநாமத்தைத் தனக்குத் தானே அறப்பட்டதி." என்று கையாலும் வாயாலும் கட்டி, கறப்பன கடைவன துவாராகையாலே பெரிய திருநாளிலும் ஸத்யவந்தனம் முட்டாமல் நடத்துமவரைப்போலே அவள் தன் கார்யத்திலே போந்ததொன்று சொல்லுகையாலே, நாபகட்ட அது அவிழ்க்கமாட்டாமலிருந்தான். கட்டினவர்களை இரக்கி அவிழ்க்க வேணு

அரு.—இரண்டாம்பாட்டு "தேவுமற்றறியேன்" என்றதைப்பற்ற அருளிச்செய்கிறார் (ஆழ்வார்களித்யாதி) ஆழ்வார்கள் பகவத்விஷயத்தில் ஆசார்யத்வ ப்ரதிபத்திபண்ணிப் போருகைக்குத் தாத்பர்யம் "அறியாதன அறிவித்தஅத்தா" என்கிறபடியே ஈச்வரனே அஜ்ஞாதஜ்ஞாபகனாய் பண்ணுகையாலே, இவர் ஆழ்வாரை ஈச்வரப்ரதிபத்திபண்ணுகைக்கு அடி ஞான ஸாம்யத்தாலேயென்று கருத்து. ஈற்றடியில் பகவத்விஷயத்திலும் ஆழ்வாருக்குண்டான வாசி சொல்லிற்று. அதாவது ஆழ்வார் தனக்கு ஈடுபட்டவபதானத்தை அநுஸந்தியா நிற்கச்செய்தேயும் அதில் காலதாமதமே ஆழ்வாருடைய போக்யதை அதிசயித்திருக்குமென்று, அதனை அருளிச்செய்கிறார் (யதிசக்நோஷியென்று தொடங்கி ஆழ்வாருடைய போக்யதையிலே நிறைவுமாய்த்ததென்னு மளவும்). (அறப்பட்டதி) என்றது அறப்பட்டேனென்றபடி. அதாவது மிகவும் நொந்தேனென்றபடி. (கையாலே கட்டினது) என்றது "பாதபபதநாதுயாகலே" என்றதைக்கடாக்ஷித்து (கறப்பன கடைவனதுவாராகையாலே) என்றது குடும்பிநீ என்றதைக் கடாக்ஷித்து.

மென்றிறே அவன் நினைவு. அப்படியே ஆழ்வாரும் இவனுடைய வைலக்ஷண்யத்திலே கட்டுண்டு, "ஏதத்வ்ரதம்" என்று போக மாட்டாமலிருந்தார். இவர் அப்படியன்றிக்கே ஆழ்வாரிட்ட அபதாநத்தை அநுஸந்தித்திருக்கச்செய்தேயும் அதில் ஆழங்கால் பட்டதே அதனைவிட்டு ஆழ்வாருடைய போக்யதையிலே நிலையாயிற்று.

கீழ்ப்பாட்டிலே "தண்ணித்தென் குருகூர்நம்பி யென்றக் காலண்ணிக்கு மமுதூறு மென்னாவுக்கே" என்று ஆழ்வார் பக்கல் ப்ராப்யத்வத்தையும் போக்யத்வத்தையும் சொல்லக்கேட்டவர்கள், சாஸ்த்ரங்களடைய பகவத்விஷயத்தையே ப்ராப்யமாகவும் போக்யமாகவும் சொல்லாநிற்க, நீர் ஆழ்வாரை இவை இரண்டுமாக அநுஸந்திப்பானென்? பகவத் விஷயத்திலேயும் அவகாஹப் பார்த்தாலோ வென்ன, அதற்கு இப்பாட்டாலே உத்தரம் சொல்லுகிறார்.

தாமதாம் பற்றின விஷயத்தைவிட்டுப் புறம்பிலே போக வேண்டுவது அவிஷயம் இஹலோக ஸாதகமல்லவாயாதல், பரலோக ஸாதகத்துக்கு ஸாதகமன்றியாதல், பற்றினவர்கள் இவ்விஷயத்தை யொழிய வேறே ஒரு ஸ்வாமியுண்டாக நினைத்திருத்தல், காலக்ஷேப விஷயமல்லாமையாலேயாதலன்றே? அதில் எனக்கு இஹலோகஸாதகருமாழ்வாரே; பரலோக ஸாதகத்துக்கு ஸாதகமும் ஆழ்வாரே; எனக்கு ஸ்வாமியுமாழ்வாரே; காலக்ஷேப விஷயமும் ஆழ்வாரே, ஆனபின்பு பகவத் விஷயத்திலே அந்வயிக்க வேண்டுகிற தென்னென்கிறார்.

சங்க்ஷேபமாகப் பாட்டுக்கு வ்யாக்யை (கீழ்ப்பாட்டிலித்யாதி) சொல்லுகிற உத்தரமித்தனை அருளிச்செய்கிறார் (தாமதாம் பற்றின விஷயமென்று தொடங்கி) (இஹலோக ஸாதகருமாழ்வாரே) என்றது "நாவினால் நவிற்றின்பமெய்தினேன் என்றதைக் கடாக்ஷித்தது. (பரலோக ஸாதகமும்) என்றது, "மேவினேனவன் பொன்னடி' என்றத்தைக் கடாக்ஷித்து. (ஸ்வாமியு மாழ்வாரே) என்றது "தேவுமற்றறியேன்" என்றதைக் கடாக்ஷித்து. (காலக்ஷேபவிஷயமு மாழ்வாரே) என்றது "பாவினின்னிசை" என்றதைக் கடாக்ஷித்து.

வ்யா (நாவினால் நவிற்றின்பமெய்தினேன்) நான் பெற்ற பேற்றைப் பார்க்கமாட்டீர்களோ? நாவினால் நவிற்று, நவிற்றுமது நாவேண்டியிருக்கச்செய்தே 'நாவினால் நவிற்று' என்கைக்கடி பகவதுக்தாம் வேண்டாதபடி 106 "अवज्ञानापि यन्नामि कीर्तिते" (அவஜ்ஞயாபி யந்நாம்நி கீர்த்திதே) என்கிறபடியே வாமாத்ரோச்சாரணத்தாலே ஆநந்தம் விளைந்ததென்கைக்காக.

(நாவினால் நவிற்றின்பமெய்தினேன்) இப்படியேயன்றிக்கே பகவத்விஷயத்தில் புகுமவர்கள் இதரவிஷயங்களை மநஸ்ஸிலே பட்டபோதே, மநஸ்ஸைக் கொண்டுபோய் பகவத்விஷயத்திலே வைத்து, பின்பு அதுவழிப் பாவனையுடையராய், அதுதானேயாய் ஸமாதிபரராக வேண்டுமே 107 "न विवेदात्मनो गात्रं तत्स्मृत्याह्लादसंस्थितः" (ந விவேதாத்மநோ காத்ரம் தத்ஸ்ம்ருத்யாஹ்லாதஸம்ஸ்தித:) என்று ஆநந்தம் விளைந்தபடி. ஆழ்வார் தமக்கு ‡ 'அடியை யடைதலாமைத்தி பின்பத்தி நெஞ்சனம் பண்ணுமின்னை' என்று இத்தனை செய்யவேண்டிற்று. (இன்பம்) இவை வளைப்பட்ட இன்பமென்னுமையாலே பலானித்தான ஆநந்தத்தை, (எய்தினேன்) எய்தப்பெற்றேன். எனக்கு 48 "लब्धानन्दी भवति" (லப்தாநந்தீ பவதி) என்னவேண்டிற்றில்லை. (நவிற்றின்பமெய்தினேன்) (எய்தினேன்) பகவத்விஷயத்தைப் பற்றினாக்கு ஆநந்தம் காலாந்தரபாவி. இங்கு அப்படியன்றிக்கே எய்திவிட்டேன். (நாவினால் நவிற்றின்பமெய்தினேன்) அநவரத பாவனைபண்ணும்

(நவிற்றும் போது நாவேண்டியிருக்க) என்றது நாவாலல்லது சொல்லவொண்ணாமையாலே, நவிற்றவும்போது நாவாலே சொல்லுவது விதிதமாயிருக்க ''நாவினால்'' என்று விசேஷிக்கிறதென்னென்னில்.

ஆகையாலே பெருமிலாதிய ஆநந்தமில்லை. இங்கு உக்திமாத்ரத்தாலே ஆநந்தம் பெற்றேனென்கிறார் (லப்தாநந்தீபவதி என்று தொடங்கி வாக்யத்வயத்தாலே). ''எய்தினேன்' என்கிற பூதகாலத்துக்கு கீர்த்தமருளிச்செய்கிறார் (பகவத்விஷயத்தை பெற்று தொடங்கி). நாவினு

‡ திருவாய் 2-68.

ஆகாரமுண்டாக வேண்டிற்றில்லை. அநுபவத்தாலுமொராகாரமுண்டாக வேண்டிற்றில்லை.

ஆனால் இப்போ சொன்ன இந்த இரண்டு பதத்தை விரும்பினீர், மாறி விசேஷணமாக்கத்தால் ப்ரகரணமானத்துக்கு ஒரு வாத்தத்தைப் பற்றவேணும். அதுக்கு ஸ்தானமாக *லோகவிக்ராந்த சரணங்களை ஆச்ரயிக்கவேண்டாவோவென்ன, (மேவினேனவன் பொன்னடி) அதுவாகில அதுக்கும் ஆழ்வார் தம்முடைய திருவடிகளை உபாயமாகப் பற்றினேன், (அவன பொன்னடி) யாதொரு விஷயத்தை நாவினால் நவிற்றின்பமெய்தினேன், அவனுடைய திருவடிகளை; பரமப்ராப்யத்தானே ப்ராப்யமுமாய்த்து. (அவன பொன்னடி) அதுபோலே உலகமளந்த பொன்னடியாய் வர்ப்பொதுவாய் எல்லார்தலையிலும் இருக்குமதாகிறே, இத்திருவடிகள் *தலைமிசைய வ்ருத்தஜநமூர்த்த விபூஷணமாயிருக்கும். வ்ருத்தஜநங்களாவார் உத்தரபாக நிஷ்டராணவர்கள். (பொன்னடி) காண தொட்டுப்பரிமாறினாலும் தோஷமவாராத திருவடிகள். (மேவினேன்) பகவத்விஷயத்தை ஆச்ரயிக்குமிடத்தில் ‡"காகுத்தனை மேகப்பிரான சரணே சரண் நமக்கென்று நாடொறுமேகசிந்தையனாய்" என்று வர்த்தமான நிர்தேசம் பண்ணவேண்டிற்று. இங்கு அப்படியன்றிக்கே ஸக்ருதாச்ரயணமமைந்தது.

லெவகையாலே அநவரத பாவனையை வ்யாவர்த்திக்கிறது. நவிற்றென்கையாலே அநுபவத்தை வ்யாவர்த்திக்கிறது.

அவனென்றதுக்கு நாலு தாத்பர்யம் ப்ராப்யனுமவனே ப்ராபகனுமவனென்னுதல். ஸாதாரணனன்றிக்கே அஸாதாரணனென்னுதல். அபரோக்ஷநிர்த்தேச்யனன்றிக்கே பரோக்ஷநிர்த்தேச்யனென்னுதல். ஒருவொரு புருஷாரம் வேண்டாதவனென்னுதல். ஆக நாலுதாத்பர்யம்.

(இங்கு அப்படியன்றிக்கே ஸக்ருத்ஸமாச்ரயண மமைந்தது) என்றதுக்குத் தாத்பர்யம் பகவத்விஷயத்தில் பரபக்தி ஸக்ருத்தாலுமும் அத்யவஸாயம் யாவத்ப்ராப்தி பண்ணவேண்டும், இங்கு ஆசார்யாபிமாநமே உத்தாரகமாகையாலே அந்த நிர்ப்பந்தமில்லையென்றபடி.

---

‡ திருவாய் 5-10-11.

(அவன் பொன்னடிமேவினேனை) பகவத்விஷயத்திற்போலே 108 "त्वमेवोपायभूतो मे भव" (த்வமேவோபாய பூதோ மே பவ) 109 "त्वत्पादमूले शरणं प्रपद्ये" (த்வத்பாதமூலே ஶரணம் ப்ரபத்யே) ‡ "உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே" என்று அபேக்ஷித்து † ஆச்ரயிக்க வேண்டாதபடி எம்மைக் குறித்து ஆச்ரயிக்கலாம்படியான அவனுடைய திருவடிகளை. (அவன் பொன்னடி மேவினேனை) ஒரு புருஷகார பலமாகவின்றிக்கே நாநிரபேக்ஷமாக ஆச்ரயித்தேனை. இங்கே ஜீயர் வார்த்தையை அநுஸந்திப்பது. (மேவினேனை) அதனோடே பொருந்திவிட்டேன். இனி வேறொருவனிருக்கைக்கு இடமில்லாதபடி பொருந்திவிட்டேன். (சாஸ்த்ர [illegible] மேவினேனவன் பொன்னடி) இத்தைப் பின்சென்றிறே ஆளவந்தாரும் ஆச்ரயவிஷயத்தில 105 "अत्र परत्र चापि नित्यं यदीयचरणौ शरणं मदीयं" (அத்ர பரத்ர சாபி நித்யம் யதீயசரணௌ ஶரணம் மதீயம்) என்றது.

---

† எங்கேயிருந்தாலும் ஆசார்யாபிமானமே உத்தாரகமென்கைக்கு ஸம்வாதமாக ஓர் திவ்ய மருளிச்செய்கிறார் (இங்கே ஜீயர் வார்த்தையை அநுஸந்திப்பது) என்று. (ஜீயர் வார்த்தை) என்றது ஜீயர் விஷயமான வார்த்தை என்றபடி. அதாவது நஞ்சீயர் ஆச்ரமஸ்வீகாரம் பண்ணினவனந்தரம் அநந்தாழ்வானைக் கண்டு "வேர்த்தபோது குளித்து பசித்தபோது உண்டு பட்டர் திருவடிகளே சரணமென்று எங்கேயிருந்தாலும் ப்ராப்திக்குக் கண்ணழிவுண்டோ? ஆயிருக்க, கைங்கர்யத்துக்கு விரோதியாயிருப்பதொரு வேஷத்தைக்கொண்டு என்செய்தீராவீர்" என்றருளிச்செய்தாராம்.

(வேறொருகால்) ஈச்வரன் திருவடிகள். "நாவினால் நவிற்றின்ப மெய்தினேன்" என்கையாலே ப்ராபகத்வமும் "மேவினேனவன் பொன்

---

† (பா) புருஷகாரம் வேண்டாவென்றதுக்கு ஸம்வாதமாகவோரை நிலையருளிச்செய்கிறார் (இங்கே ஜீயரித்யாதி) ஜீயர் வார்த்தையாவது, பட்டர் மேல்நாட்டுக்கெழுந்தருளுகிறபோது காடும் மலையும் கடந்து ஒரு புருஷகாரமின்றிக்கே மேல்விழுவதே யென்று நஞ்சீயர் ஈடுபட்டுச் சொன்னவார்த்தை.

---

‡ திருவாய் 6-10-10.

'மேவினேன் அவன் பொன்னடி" என்றீர். அந்த ஆசார்யனைத்தான் 108 "सा देवेऽस्मिन् प्रयुज्यता" (ஸா தேவேஸ்மிந் ப்ரயுஜ்யதாம்) என்கிறபடியே ஸர்வஸ்வாமியான ஈச்வர விஷயத்திலே ப்ரயோகிக்க வேண்டாவோ வென்ன, (தேவுமற்றறியேன்) என் அப்படி பிரும்பமொரு ஸ்வாமியுடைய வ்யுத்பத்திபண்ணி வைக்கிலன்றோ வேண்டுவது? (தேவுமற்றறியேன், தேவு அறியேன், ஆழ்வாரை யொழிய வேறறியேன். ஸாக்ஷாத் காட்டித்தந்ததன்றோ தைவ படைத்து; அதுதானே 78 "आचार्यदेवो भव" (ஆசார்யதேவோ பவ) என்று விதித்தே. தேவுமற்றறியேன்) தேவதா வ்யுத்பத்தியுள்ள விடத்திலன்றோ தேவதா ப்ரதிபத்தி உள்ளது. ஆகையாலே நான் தேவதையாக வ்யுத்பத்திபண்ணிற்று ஆழ்வாருக்கு மேற்பட இல்லை. ஆனால், எனைப்பன்னூறு நீ ஏழ் பகவத்விஷயத்தை ஸ்வாமியாக அநுஸந்தித்தீரே யென்ன, அது ஆழ்வார் தமித்த விஷயமென்று ஆதரிக்கைத்தவிரப்போகத் தேவதா ப்ரதிபத்தி பூர்வகமாகச் சொன்னேனன்று. 109 "अनन्यदेवत्वमियं क्षमा च" (அநந்யதைவத்வமியம் க்ஷமா ச) என்று அநந்ய தைவத்வத்தையுடைய பிராட்டி பெருமாளுக்கு எடுத்துக் கைகீட்ட பெரிய பெருமாளைப்பெற்றும்போலே; இவர்க்கும் நான் விசலயிக்கும்படி யென்னென்ன, (மெய்ம்மையே) இது ஸத்யமே. (மேவினேன் பொன்னடி மெய்ம்மையே தேவு மற்றறியேன்) ஸ்ரீமதுரகவிகள் தலைமேலே கொண்டிருந்தும் பொய்சொல்லுவாருண்டோ?

ஆனால் காலக்ஷேபத்துக்கு பகவத்விஷயத்தைப் பற்றிக் காலம் போக்கவேணுங்காணும் என்ன, (குருகூர்நம்பி பாவினின்

...டி மெய்ம்மை' எல்லைப்பால் ப்ராபகத்வமும் சொல்லுகிறது. இத்தைப் பின் சென்றே ஆளவந்தாரும் "அத்ரபரத்ராபி" என்றருளிச்செய்தார். ...றியேன்' என்றபதத்துக்குப் பொருளருளிச்செய்கிறுர் (தேவதா வ்யுத்பத்தியுள்ளவிடத்திலே) என்று தொடங்கி.

(மூன்றிரண்டா விருந்ததோ) என்றது திருமந்த்ரமும் த்வயமும். "பகவாந்" என்று ஜ்ஞாநாதி குணபூர்த்தி சொல்லுமாப்போலே இங்கும் நம்பி யென்று ஜ்ஞாநாதி குணபூர்த்தியை அருளிச்செய்கிறுர். அப்படி ஜ்ஞா

விஷயபூத திரிவிஷயமே) எனக்கு காலக்ஷேப விஷயம் உனக்குப் போலே ஒன்றிரண்டா யிருக்கிறதோ? ஆயிரம் பாசுரமில்லையோ? (ருக்ஸாமமயி) கவிபாடுகைக்கீடாம்படி, 110 "वाल्मीकिर्भगवानृषिः" (வால்மீகிர்ப்பகவாந்ருஷி) என்கிறபடியே பூர்ணரான ஆழ்வார். * "எத்தம் பெரும்புகழ்வானவர்ஈசன் கண்ணன் றனக்கு என்றார் பெரும்புகழ் வண்குருகூர்ச்சடகோபன்" என்கிறபடியே இந்த விஷயத்துக்குப் பாதவசொல்லப்பூர்த்தி; ஸ்தோத்ரவிஷயத்துக்கு ஜ்ஞாநபக்திபூர்த்தி. † "கண்டுகொண்டென் கண்ணிணையாரக் களித்தே" * "தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொல்லிறது. (இன்னிசை) பாடுகிறபோதே கூடக்கேண்மினென்னிசையை. (பாடி) அநுபவித்துக்கொண்டு பாடி. (ருக்ஸாமமயி இன்னிசைபாடி) பகவத்ப்ரதிபாதகமான இவர் திருவாய்மொழியைப் பாடித்து ஆழ்வார் அருளிச்செய்தபடியோறு கிறது. § "உயர்வறவுயர் நலமுடையவன்" § "வண்புகழ் நாரணன்" ‡ "மலர்மகள் விரும்பும் நமரும்பெறலடிகள்" | "எம்பெருமான் செய்யதாமரைக்கண்பெருமானார்" என்று பாட்டுதோறும் பகவத் விஷயத்தோடு உறவறுத்தே இவர் பாடுகிறது.

(திரிவனே) அன்றுபோலல்லதோ 111 "एतत्साम गायन्नास्ते" (ஏதத் ஸாம காயந்நாஸ்தே) என்றிருக்கவேண்டுவது? இது அப்படி யன்றிக்கே விச்ருங்கலமாகத் திரியாநிற்பன. (திரிவனே) இது

நாதி ருணபூர்த்தி உண்டோவென்ன அருளிச்செய்கிறார் (ஏற்கும் பெரும்புகழென்று தொடங்கி). சந்தைக்குப் பொருளருளிச்செய்கிறார் (எத்தவ விஷயத்துக்கென்று தொடங்கி). ஜ்ஞாநபக்திகளுண்டென்கைக்குப் பின்னையு மொருப்ரமாண மருளிச்செய்கிறார் (கண்டுகொண்டென் கண்ணிணையென்று தொடங்கி.) (பா–திரிவை) பா–சந்தஸ்ஸு கூடினை (திரிகிற போதே) உண்டாகிறபோதேயென்றபடி.

பகவத்ப்ரதிபாதகமன்றே திருவாய்மொழி. அத்தை இவர் காலக்ஷேபத்துக்காக அநுஸந்திக்கிறதென்னென்ன அருளிச்செய்கிறார் (பகவத் ப்ரதிபாதகமென்றனறு) என்று தொடங்கி உக்தத்தை விவரிக்கிறார்


* திருவாய் 3-9-11. † திருவாய் 9-4-9. ‡ திருவாய் 1-1-1.
§ திருவாய் 1-1-10. ‡ திருவாய் 1-3-1. | திருவாய் 1-4-2.

எனக்கும் ஈஸ்வரர், ஆகையாலே மாதாவும் பிதாவும், ஸ்வாமியும் காலக்ஷேபவிஷயமும் எனக்கு ஆழ்வாரே என்று பகவத்விஷயத்தோடே அவகாஹித்த தேடினவர்களுக்கு உதாரம சொன்னாராய் நின்றது.

இரண்டாம் பாட்டு வ்யாக்யானம் முற்றிற்று.

(உயர்வற உயர்நலமென்று தொடங்கி) அவனுடைய கல்யாண குணங்களையும் ஸ்ரியப்பதித்வத்தையும் விக்ரஹ வைலக்ஷண்யத்தையும் அருளிச் செய்தும் "தேவுமற்றறியேன்" என்றிருக்கையாலே பகவத்விஷயத்தோடு உறவற்றிருப்பவராகையாலே ஆழ்வாருவிச் செய்ததை இட்ட நலம்நின்றபடி.

இரண்டாம்பாட்டு அரும்பதம் முற்றிற்று.



---

3 திரிதந்தாகிலும் தேவபிரானுடைக்
கரியகோலத் திருவுருக்காண்பனான்
பெரியவண் குருகூர்நகர் நம்பிக்கா
ளுரியனாயடியேன்பெற்ற நன்மையே

பதவுரை:—திரிதந்தாகிலும் — ஆழ்வாரை விட்டு நீங்கினாலும், தேவபிரானுடைய — நித்ய ஸூரிகளுக்குத் தலைவனான எம்பெருமானுடைய, கரிய — நீலமேகம்போல், கறுத்ததாய, கோலம் — அழகியதான, திருவுரு — திவ்ய ரூபத்தை, நான் காண்பன் — நான் ஸேவிப்பேன்; பெரியவண் குருகூர்நகர் நம்பிக்கு — பெருமையும் ஔதார்யமுமுடைய ஆழ்வாருக்கு, உரிய ஆள் ஆய — அநந்யார்ஹ சேஷபூதனாயிருக்கும்படியான, அடியேன் பெற்ற நன்மை — அடியேன் பெற்றபேறு இது காணீர்.

நஞ்சீயர் வ்யாக்யானம்

அவ:—மூன்றாம் பாட்டு. ஆழ்வார் நீர்த்த விஷயமேயாகிலும் உகப்பேன் என்கிறார்.

வ்யா. (திரிதந்தாகிலும்) 46 "न च पुनरावर्तते" (ந ச புநராவர்த்ததே) என்கிறது பகவத்விஷயத்தைப்பற்ற, அதனை முதலாகக் கொண்டு முடிந்த நிலத்தளவிலே போனவழியெல்லாம் மீளாதொழிந்தபடியிறே ஆழ்வார் திருவடிகளில் தமக்குண்டான பாரதந்த்ர்யமிருக்கும்படி.

(தேவபிரானுடைக் கரியகோலத் திருவுருக்காண்பன் நான்) நித்யஸூரிகளுக்குப் படிவிடும் வடிவுகாணும் இவர் வேண்டாதொழிகிற விஷயமிருக்கும்படி. இவனெல்லாம் இவர்க்கு உத்தேச்யனாகப் பெறாதொழிந்தான், ஆழ்வார் உகந்தார் என்று உத்தேச்யராகப் பெறுகிறார். 112 "पाणौ गृहीत्वा विदुरं सात्यकिश्च महायशाः। ज्योतींष्यादित्यवद्राजन् कुरून् प्रच्छादयन् श्रिया" பாணௌ க்ருஹீத்வா விதுரம் ஸாத்யகிஸ்ச மஹாயஸா:। ஜ்யோதீம்ஷ்யாதித்யவத் ராஜந் குரூந் ப்ரச்சாதயந் ச்ரியா) என்கிறபடியே வெஞ்சால் பொருந்தாமையன்றிக்கே கண்ணால் காணவும் பிறவாவிருக்கிறபடி. 113 "तरुणौ रूपसंपन्नौ" (தருணௌ ரூபஸம்பந்நௌ) என்கிற முறைப்படியவர் வார்த்தையும், விஷயமிருந்தபடி பேசவேணுமிறே.

(பெரியவளை தருகலிங்கள் நம்பிக்கு) ஸாத்திர பேசுமாரான அப்படியாருக்கு ஆழ்வாரோ நவர்க்கதயிற்று ஈச்வரன் பரதந்த்ரனல்ல மருளிறறு. இவர் இதத்துக்காக பார்த்ரமதல மருளிருரிற இவையும் காட்டிதரு மூரானயாலே வண்மையின பிகுத சொலலுகிறது. பிரசுஜரட நாதரோடாடுகிற அவ்துகளதக்கு லீலாலாபரான பூர்வ மூலமிறு இருக்க. தாம சொலலு ஈதாதும ("பெரியவன் தநருக் வளாசட கோலல' என்றிறு சொலலுவது. இவருடைய ஸ்வாபாவை நேவிறு படி. (ஆநரிய து படிமேயன்பெறறநலவமைமெ) 'அடியேன' என்கை யாலே இவருடைய சதுர்த்யிலதததுதைக் காட்டுகிறது. அவருடை சேஷ உகந்ததை உககுமதமிற கைங்கர்யத்திலேலே நிலமாமிறது

நஞ்சீயர் வ்யாக்யாநம் முற்றிறறு.

நம்பிள்ளை ஈடு

அவ—மூமறும பாட்டு. (திரிதாதர்விஆ) "தேவுமறறறி யேன்" என்ருர்கீழ். ஆழ்வாரபற்றின விஷயமொழு அவவழி யாலே பறறுகிருர். கிடாதாரை கணைட்டாமாபோலே தந்தலை யாலே வருமதிறே தவிர்ததுக்கொண்டது ['"தங்கள தேவரை வலல பரிசுவருவிப்பரேல்" என்று அததலையாலே வருமது தவிர்ததுக்கொண்டிலரே. பரர்ப்பணையைப்போலே வழியலலா வழியே வருமவையிறே தவிர்ததது, ஆழ்வார் தலையாலே வருமது தவிரகிலரே. 21"भवतः परमो मतः"(பவத: பரமோ மத:) என்றுகேட்ட 22 "धर्मोऽधिकतमो मतः"(தர்மோதிகதமோ மத:) என்று ஆசாரவருசி பரிகருஷ்திமாய வருமது ஏதேனுமாகிலுமவையும இவர்க்கு.

குணமலையபாடியுடையார் வாங்கேடர் தெற்கே எடுததுவிடுகிற வளவிலே கோயிலாச்சானை இவருக்குச் சில அரிசியும பச்சையும் வர்கொட்டிருன். அப்போது எக்குறிதமாயிருக்கையாலே அப்ப சுதிதமாயிருக்குமிறே. இவ்வளவிலே உபகரித்தவனுக்கு ப்ரதயுப காரம பண்ணவேணுமென்று நினைத்திருந்து பின்பெருமாளிலே கண்டு "எங்கள பக்கலிலேயும ஒருபகாரம கொள்ளவேணும"

---

1 திருவாய் 8-1-11. / ராச-திரு 13-10.

என்ன, "கண முனைப்பெசொண்டேன்" என்ன, "எனையதி யாமல என்னை கொண்டாய" என்ன, 'எமகளாசாரச் கோயிலாமிலே நீ ஞகூறித்த படியை நினைத்து 'அவனேயாளனுமே இராமன்பெற்றேர' என்று பலகாலு மருளிச்செய்யக்கேட்டேன், இனிக்கொள்ளவேண்டியதொரு உபகாரமில்லை" என்ருன்.

நம்பியார் தேவியார் வடமொழுகித்தலத்தையும் ஆச்சர்யமிய வென்றுமென்று நினைத்திருந்த எமபெருமானை அங்கீகரித்தார் கள், அவரங்கீகரியாமையன்றே அவர்தேவரையாக நினைத்திருக் கிறவிதன்ருர்.

வ்யா :—(திரிதத்தாகிலும்) திரிகையாகவு மீளுவை; மீண்டா கிலும், தரமென்று அதுகது அடையன சொலலைச், திரிதர தாகிலுமெனதது போனவழியெலலாம் மீண்டாகிலும். அதாவது ஆழ்வார் புணர்ப்பைவிட்டு, ஆழ்வார் தமமைவிட்டு, இவவாவுரவாகது.

தேவபிரானுடைக கரியகோலத்திருவுருக் காணபன்) இவர் தாம நின்றநிலை குலைாது பகவத்விஷயத்திலே நித்யமபோதும் நித்யஸூரிகளுடைய யாத்ரையேயாய்த்திருப்பது. (தேவபிரான்) நித்யஸூரிகளுக்குத் தன்னை முற்றுட்டாக அநுபவிக்கக்கொடுத் துக்கொண்டிருக்கும் உபகாரகன். (தேவபிரானுடைக் கரியகோலத் திருவுரு) போகப்ரவ்ருத்தரான ஊர்வசியினுடைய வடிவழகை வர் ணிக்குமாப்போலே சொல்லுகிறார். / "கோலமேனி தாமரைக் கண்ணனே செங்கனிவாய்" என்று ஆழ்வார் சொல்லக்கேட்டிருந்த செவி யேற்றமே சொல்லுகிறார். (காண்பன்) போகப்ரவ்ருத்தனுக்கு விஷயம் கண்ணுக்கு இலக்காமாபோலே ஆழ்வாரை விட்டால பகவத் விஷயமாய்த்து இவர் காணபது (யான்) இப்படி வைலக்ஷண்யமுடைய பேர நான்.

(பெரியவண் குருகூர்நகர் நம்பிக்கு) "நான் ஒன்றைப்பற்றி னேன்; ஒன்றைவிட்டேன்" என்று சொல்லலாமபடியோ ஆழ் வாருடைய பூர்த்தியிருப்பது? (ஆளுரியனாய்) உரியவடியனாய். / திருவாய் 3-8-8.

உகிலவடியாரைத் தந்தாமுகனென ஒரு பரிபாப்பிரியர்களின் திகழ்க லையமிப்பற்றினதைப்பற்றி அவன் காதலைக்கொண்டதைக் காதலைக் கொள்ளுமதங்களையாய்த்திருப்பது.

[வைகுந்தனின் திருவடித்தாமரையிணையின் நினைவாகிற அமுதத்தைப் பருகுபவர்கள்]

50 கச்சதாம் தூரமத்வாநம் த்ருஷ்ணாமூர்ச்சித சேதஸாம் |
பாதேயம் புண்டரீகாக்ஷ நாமஸங்கீர்த்தநாம்ருதம் ||

[நெடுவழி நடப்பவர்களும், தாஹத்தால் மயங்கிய நெஞ்சை உடையவர்களுமான அவர்களுக்குத் தாமரைக்கண்ணனின் திருநாம ஸங்கீர்த்தனமே கட்டுச்சோறாகும்.]

51 வாஸுதேவோஸி பூர்ண:

[ஞானாதி குணங்கள் ஆறும் நிறைந்த பரவாஸுதேவனாயிருக்கிறாய்.]

52 க்ருஷிர் பூவாசக: சப்தோ ணச்ச நிர்வ்ருதிவாசக: |
விஷ்ணுஸ் தத்பாவயோகாச்ச க்ருஷ்ண இத்யபிதீயதே ||

['க்ருஷி' பதம் (க்ருஷி விஷயமான) பூமியைச் சொல்லும் சொல், 'ண:' என்பது ஆனந்தத்தைக் குறிக்கும் சொல், ஆனந்தத்திற்கு

48. தைத்-ஆந-7. 50 காருட புராணம் 220-16.

நிர்ஹேதுகமாக அருளைப் பொழிபவனையே வியந்து வானவர் 'கருணை' என்று சொல்லப்படுகிறார்.]

53. பக்திக்ராஹ்யோ ஹ்ருஷீகேச:
[பக்திக்குக் கட்டுப்படுமவன் கேசவன்]

54. அபங்குர பக்திபவ்ய:
[அசைவற்ற பக்திக்கே வசப்படுமவன்.]

55. பக்த்யா மாமபிஜாநாதி யாவாந் யச்சாஸ்மி தத்த்வத: |
ததோ மாம் தத்த்வதோ ஜ்ஞாத்வா விசதே ததநந்தரம் ||

[ஸ்வரூபஸ்வபாவங்களில் நான் எவனோ, குணவிபூதிகளில் நான் எவ்வளவு பட்டவனோ, அப்படிப்பட்ட என்னை பக்தியினாலே உள்ளபடி அறிகிறான். என்னை உள்ளபடி அறிந்து அதற்குப்பின் பக்தியினாலேயே என்னுள் நுழைகிறான்.]

56. பக்த்யா த்வநந்யயா சக்ய அஹமேவம்விதோऽர்ஜுந |
ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்த்வேந ப்ரவேஷ்டும் ச பரந்தப ||

[அர்ஜுனா! எதிரிகளை அழிப்பவனே! ஒருபயனை எதிர்பாராத பக்தியினாலேயே இப்படிப்பட்ட நான், உண்மையாக அறிவதற்கும், பார்ப்பதற்கும், நுழைவதற்கும் தக்கவன்]

57. புருஷ: ஸ பர: பார்த்த பக்த்யா லப்யஸ் த்வநந்யயா |
யஸ்யாந்தஸ்தாநி பூதாநி யேந ஸர்வமிதம் ததம் ||

[பார்த்தனே! எவனுடைய உள்ளே ஸகல பூதங்களும் உள்ளனவோ, எவனால் இவையெல்லாம் வியாபிக்கப்பட்டதோ, அந்தப் பரமபுருஷன் வேறிடம் செல்லாத பக்தியினாலேயே அடையத்தக்கவன்]

58. நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ ந மேதயா ந பஹுநா ச்ருதேந |
யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஸ் தஸ்யைஷ ஆத்மா
விவ்ருணுதே தநூம் ஸ்வாம் ||

55. கீதை 18-55. 56. கீதை 11 54. 57. கீதை 8-22.
58. கட 1-2-28.

[இந்தப் பரமாத்மா (பகவானது) ச்ரவணத்திலேயும், மனனத்திலேயும், தியானத்திலேயும் அடையத்தக்கவனல்லன். எவனை இப்பரமாத்மா வரிக்கிறானோ, அவனாலேயே அடையத்தக்கவன்; அவனுக்கு இந்தப் பரமாத்மா தன்னுடைய திவ்யமங்களவிக்ரஹத்தை (ஸ்வரூபத்தை) காட்டுகிறான்]

59. அஞ்ஜலி: பரமா முத்ரா க்ஷிப்ரம் தேவப்ரஸாதிநீ

[வேகு சீக்கிரமாக பகவானை உகப்பிக்கும் அஞ்ஜலி மேலான அடையாளமாயிருக்கிறது.]

60 க்ருதாபராதஸ்ய ஹி தே நாந்யத் பச்யாம்யஹம் க்ஷமம் |
அந்தரேணாஞ்ஜலிம் பத்த்வா லக்ஷ்மணஸ்ய ப்ரஸாதநாத் ||

[(ராமனிடம்) அபராதம் செய்த உனக்கு, கைகூப்பி லக்ஷ்மணனை உகப்பிப்பதைத் தவிர வேறு பிராயச்சித்தத்தை நான் காண்கிறே னில்லை.]

61. அஹமஸ்யாவரோ ப்ராதா குணைர் தாஸ்யமுபாகத:

[நான் இவருடைய சிறிய (இளைய) தம்பி; (உண்மையில்) இவருடைய குணங்களால் அடிமைப்பட்டவன்.]

62&63. பஞ்சசக்திமயே திவ்யே சுத்தஸத்வே ஸநாதநே |
த்ரிபாத்விபூதௌ பகவாநைச்வர்யாத் பரமேச்வர: ||
நித்யமுக்தைக போக்யோஸௌ மோததே பகவாந் ஹரி: ||

[பஞ்சசக்திமயமாய், அப்ராக்ருதமாய், சுத்தஸத்வமயமாய், நாசமற்றதாய் இருப்பிடமான பரமபதத்தில் ஈச்வரியான பிராட்டியோடு கூட பரமபுருஷனும், ஐச்வர்யபூர்ணனான இந்த ஹரி நித்ய முக்தர்களுக்கு அநுபாவ்யனுமிருக்கிறான்.]

64. அசிதவிசேஷிதாந் ப்ரளயஸீமநி ஸம்ஸரத:
கரணகளேபரைர் கடயிதும் தயமாநமநா: |

---

59. பரத்வாஜஸம்ஹிதை. 60. ரா-கி 32-17.
61. ரா-கி 4-12. 64. ர-ஸ்த 2-41.

யாத ஸ்ருஜசசைவ ப்ராக்ருதோ: ப்ரக்ரு
மருஷ ஸ்ரீரோத்ஸுகஸ்ருஷ்ஜேரணாவிர்பாவ ஜீவாக்ஷணிக:॥

[வரத்தநாம பெருமானே! பிரளயகாலத்தில் அசேதனத்தைக்காட்டிலும் வாசியறமாய்க் கிடந்த ஜீவாத்மாக்களை இந்திரியங்களோடு சேர்க்கைமாட்டுச் சேர்க்கத் திருவுள்ளம்கொண்டவராய், தண்ணளிபடைப்பட்டவனாய், மூலப்ரக்ருதியை, மஹான், அஹங்காரம், பஞ்சபூதங்களை, இந்திரியங்கள் ஆகிய இவற்றின் வரிசையாகிற அருமையுடைமையாகப் படி பண்ணினாய்]

65 விசித்ரா தேஹஸம்பத்திரீச்வராய நிவேதிதும்।
பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மன் ஹஸ்தபாதாதிஸம்யுதா॥

[ப்ராஹ்மணரே! கைகால் முதலியவைகளுடன் கூடியதும், விசித்திரமானதுமான தேகமாகிற இச்செல்வம், ஈச்வரனுக்கு ஸமர்ப்பிப்பதற்காக ஆதிகாலத்திலேயே செய்யப்பட்டிருக்கிறது.]

66. ஹர்த்தும் தமஸ் ஸதஸதீ ச விவேக்துமீசோ
மாநம் ப்ரதீபமிவ காருணிகோ ததாதி।
தேநாவலோக்ய க்ருதிந: பரிபுஞ்ஜதே தம்
தத்ரைவ கேசித் சபலா: சலபீபவந்தி॥

[கருணைக்கடலான எம்பெருமான (அஜ்ஞானமாகிற) இருளை நீக்கிக்கொள்ளவும், நன்மை தீமைகளை ஆராய்ந்து அறிவதற்கும், (இந்நூல்களைப்) பெருகடிப்பதற்கும், உள்ளவற்றையும், இல்லாதவற்றையும் ஆராய்ந்து அறிவதற்கும் சாதனமான விளக்கைப்போன்ற வேதத்தைக்கொடுக்கிறான். பாக்யவான்கள், அந்தத் திருவிளக்கைக்கொண்டு, அந்த ஸர்வேச்வரனைக் கண்டு அநுபவிக்கிறார்கள்; சில சபலர்கள் அந்த விளக்கிலேயே விட்டில் பூச்சியைப்போல் விழுந்து மடிகிறார்கள்.]

67. உத்பத்யதே யதா லோகே துளஸீ கந்தஸம்யுதா

[எப்படி உலகில் துளஸியானது வாஸனையோடு கூடவே உண்டாகிறதோ]

65. ஸ்ரீவிஷ்ணுதத்வம் 6. 66. வரதராஜ ஸ்தவம் 2-1.

68. நாஹம் புரஸ்காரேண ச சாபமர்ஷேண தோஷத: |
கேவலம் ஸ்நேஹஸம்யுக்தாஹம் ப்ரேக்ஷே கஞ்சித கடாக்ஷ: ||

[நான் புரஸ்காரத்தாலோ, அல்லது வேண்டுதல் காரணத்தாலோ, வசமாவதில்லை, என் விருப்பத்தால் மாத்திரமே ஒரு சேதனனை ஒருபோது கடாக்ஷிக்கிறேன்]

69. பால ஆஷோடசாப்தாத்து மூகபாவம் கமிஷ்யதி

[குழந்தையான சடமாழ்வார் பதினாறு வயது வரையில் ஊமையாயிருப்பார்]

70. அவ்யயச்சிந்நாஸ் ததஸ் த்வேதே ஸ்ருஷ்டிஸ்தித்யந்தஸம்பவா:

[(உலகை) ஆக்கல், அளித்தல், அழித்தல் என்னும் இந்த நியமங்கள் இடைவிடாமல் ஏற்படுவன]

71. மத்பக்தஜநவாத்ஸல்யம் பூஜாயாஞ்சாநுமோதநம் |
ஸ்வயமப்யர்ச்சநஞ்சைவ மதர்த்தே டம்பவர்ஜநம் ||
மத்கதாச்ரவணே பக்தி ஸ்வரநேத்ராங்கவிக்ரியா |
மமாநுஸ்மரணம் நித்யம் யச்ச மாம் நோபஜீவதி ||
பக்திரஷ்டவிதா ஹ்யேஷா யஸ்மிந் ம்லேச்சேபி வர்த்ததே |
ஸ விப்ரேந்த்ரோ முநி: ஸ்ரீமாந் ஸ யதி: ஸ ச பண்டித: ||
தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதா ஹ்யஹம் ||

[(1) என் பக்தர்களிடத்தில் வாத்ஸல்யம், (2) என்னை ஆராதனம் செய்வதை ஆமோதித்தல், (3) தானே என்னை பூஜித்தல், (4) என் விஷயத்தில் டம்பமற்றிருத்தல், (5) என் கதைகளைக் கேட்பதில் அன்பு, (6) (என் கதைகளைக்கேட்கும்போது) குரல் தழுதழுத்தும், கண்ணீர் மல்கியும், உடம்பு மயிர்க்கூச்செறிந்தும் கொண்டுமிருக்கை, (7) எப்போதும் என்னை நினைத்திருக்கை, (8) என்னிடம் வேறு ஒரு ப்ரயோஜனத்தையும் கோராதிருக்கை, என்னும் இந்த எட்டு விதமான பக்தியானது எந்த ம்லேச்சனிடமும் காணப்படுகிறதோ, அவனே ப்ராஹ்மணச்ரேஷ்டன்; அவனே முனிவன்; அவனே தனவான்; அவனே பண்டிதன்;

71. காருடம் (219-6 ...10,

அவனுக்கு ஞானத்தை உபதேசிக்கலாம், அவனிடமிருந்து ஞானோபதேசமும் பெறலாம், அவன் என்னைப்போல பூஜிக்கத் தக்கவன்]

72 உதாராஸ் ஸர்வ ஏவைதே ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்

[இவர்கள் எல்லாரும் உதாரமானவர்களே, ஞானியோ எனக்கு ஆத்மா (தாரகன்) என்று என் ஸித்தாந்தம்.]

73 ததோऽகில ஜகத் பத்மபோதாயாச்யுத பாநுநா|
தேவகீ பூர்வஸந்த்யாயாமாவிர்பூதம் மஹாத்மநா||

[மஹாத்மாவாகிற அச்யுத சூரியன், அகிலஜகமாகிற தாமரை மலருவதற்காக தேவகியாகிற கிழக்குத்திக்கில் தோன்றினான்.]

74. யத்சோ ஸஹஸ்ரமபஹந்தி தமாம்ஸி பும்ஸாம்
நாராயணோ வஸதி யத்ர ஸசங்கசக்ர:|
யந்மண்டலம் ச்ருதிகதம் ப்ரணமந்தி விப்ரா:
தஸ்மை நமோ வகுளபூஷண பாஸ்கராய||

[(இருளைப்போக்கும் சூரியனுடைய ஆயிரம் கிரணங்களைப்போலே) எவருடைய ஆயிரம் திருவாய்மொழிப்பாசுரங்களும் மனிதர்களின் அகவிருளைப் போக்குகின்றனவோ, (சூரியமண்டலத்திற்போலே) நாராயணன் சங்கசக்கரங்களோடு கூடியவனாய், எவரிடத்தில் வஸிக்கிறானோ, (வேதத்திற்காணும் சூரியமண்டலத்தை வணங்குவதுபோலே) எவருடைய பிறப்பிடமான குருகூரை, ('குருகூர்ச் சடகோபன்' முதலான பாசுரங்களில்) காதிற்கேட்ட மாத்திரத்தில் அந்தணர்கள் வணங்குகின்றனரோ அப்படிப்பட்ட வகுளாபரணராகிய நம்மாழ்வாராகிய சூரியனுக்கு நமஸ்காரம்.]

75. தேவமிவாசார்யமுபாஸீத

[பரமாத்மாவைப்போலே ஆசாரியனையும் உபாஸிக்கக்கடவன்.]

76. 39-வது ப்ரமாணம் காண்க.

---

72. கீதை 7-18. 73. வி-பு 5-3-1. 74. பராசரபட்டர். 75. ஆபஸ்தம்பதர்மஸூத்ரம்.

77 குருரேவ பரம் ப்ரஹ்ம குருரேவ பரா கதி: |
குருரேவ பரா வித்யா குருரேவ பரம தநம் ||
குருரேவ பர: காமோ குருரேவ பராயணம் |
யஸ்மாத் ததுபதேஷ்டாஸௌ தஸ்மாத் குருதரோ குரு: ||

[குருவே மேலான பரஹ்மம்; குருவே மேலான கதி; குருவே மேலான கல்வி, குருவே மேலான பொருள், குருவே மேலான இன்பம்; குருவே மேலான பரப்பயம்; அப்பரம்பொருளை உபதேசிப்பதால் குரு அவனினும் உயர்ந்தவன்]

78, ஆசார்யஸ் ச ஹரிஸ் ஸாக்ஷாத் சரரூபீ ந ஸம்சய:
[ஆசாரியனே இங்கே நடமாடும் பரமபுருஷன், இதில் ஐயமில்லை.]

79 ஏஷ வை பகவாந் ஸாக்ஷாத் ப்ரதாந புருஷேச்வர.

[பிரகிருதிபுருஷர்களுக்கு ஈசனான ஸாக்ஷாத் பரமபுருஷனே இவ்வாசாரியனே.]

80. யோகீச்வரைர் விம்ருக்யாங்க்ரிர் லோகோடம் மநுதே நரம

[யோகியர் தலைவராலே தேடப்படும் பரம்பொருளான இவ்வாசாரியனை இவ்வுலகம் மனிதனாக நினைக்கிறது]

81. ஸாக்ஷாத் நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும் |
மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாத் சாஸ்த்ரபாணிநா ||
தஸ்மாத் பக்திர் குரௌ கார்யா ஸம்ஸாரபயபீருணா ||

[ஸாக்ஷாத் பரமபுருஷன் தன் கருணையாலே (ஆசார்யனாகிற) மனிதவுருவையெடுத்துக்கொண்டு சாஸ்திரங்களாகிற கைகளாலே (ஸம்ஸாரக்கடலில்) மூழ்கியிருக்கும் உலகங்களைக் கைதூக்கிவிடுகிறான். ஆகையால ஸம்ஸாரக்கடலைக்கண்டு பயந்தவன் குருவிடம் பக்திசெய்யவேண்டும்]

82. க்ருதே ந்ருஸிம்ஹோ பகவாந் த்ரேதாயாம் ரகுநந்தந: |
த்வாபரே நந்தஸூநுச்ச கலௌ தேவ: பராங்குச: ||

77. ஸாத்வதஸம்ஹிதை. 81. ஜயாக்யஸம்ஹிதை பாஞ்சராத்ர வசனம்.

[க்ருதயுகத்தில் அத்திரிக்குப் பிள்ளையான தத்தாத்ரேயனைப் (ப்ராஹ்மண வர்ணத்திலும்), த்ரேதாயுகத்தில் ரகுகுலதிலகனான ராமனை (க்ஷத்ரிய வர்ணத்திலும்), த்வாபரயுகத்தில் யாதவகுலத்தில் கண்ணனை (வைச்ய வர்ணத்திலும்), கலியுகத்தில் நம்மாழ்வாரை (சூத்ர வர்ணத்திலும்) தேவன் (தோன்றுவித்தான்)]

83. சதுரே கலியுகே ப்ராப்தே நாஸ்திகை: கலுஷீக்ருதே।
விஷ்ணோரம்சாம்சஸம்பூதோ வேதவேதார்த்த தத்த்வவித்॥
ஸ்தோத்ரம் வேதமயம் கர்த்தும் த்ராவிட்யா நிஜபாஷயா।
ஜநிஷ்யதி ஸதாம் ச்ரேஷ்டோ லோகாநாம் ஹிதகாம்யயா॥

[கொடிய கலியுகம் வந்தடைந்து நாஸ்திகர்களால் (உலகம்) கலங்கியிருக்கையில், விஷ்ணுவின் அம்சத்தில் பிறந்தவராய், வேதங்களினுடையவும் வேதப்பொருளினுடையவும் உண்மையை உணர்ந்தவராய், நல்லோர் தலைவரான நம்மாழ்வார், உலகங்கட்கு நன்மை செய்யவேணும் என்னும் விருப்பத்தாலே தன் பாஷையான தமிழில் வேதமயமான துதியைச் செய்யத் தோன்றுவர்.]

84. கலௌ புந: பாபதாபிபூதே
ஸ உத்பவத்யாச்ரிதவத்ஸலத்வாத்।
பக்தாத்மநா விச்வஜநாந் ஸமாகோபதும்
விச்வாதிகோ விச்வமயோ ஹி விஷ்ணு:॥

[பாவிகள் நிறைந்திருக்கும் கலியுகத்தில் ஸர்வாதிகனும், ஸர்வாத்மாவுமான அந்த விஷ்ணு அடியாரிடம் வாத்ஸல்யமுடையவனாகையாலே உலகினரை நன்கு ரக்ஷிப்பதற்காக பக்தரூபியாக அவதரிக்கிறார்.]

85 கலௌ கலு பவிஷ்யந்தி நாராயணபராயணா:।
க்வசித் க்வசிந் மஹாபாகா த்ரமிடேஷு ச பூரிச:॥
தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா பயஸ்விநீ।
காவேரீ ச மஹாபாகா ப்ரதீசீ ச மஹாநதீ॥
யே பிபந்தி ஜலம் தாஸாம் மநுஜா மநுஜேச்வர।
தேஷாம் நாராயணே பக்திர் பூயஸீ நிருபத்ரவா॥

84. திருக்குருகா மாஹாத்மயம். 85. பாகவதம் 11-5-38, 39, 40.

[கலிகாலத்தில் தமிழ்நாட்டில், அங்கும் பெரும்பாலும் தாம்ர பர்ணி, க்ருதமாலை, பாலாறு, பெரும்புகழ்பெற்ற காவேரி, மேற்கு சமுத்ரமும் பாய்கிற, மஹாநதி ஆகிய நதிக்கரைகளில் ஆங் காங்கு நாராயணனிடம் பரமபக்தர் பக்தர்களைக்கொண்ட மஹாத் மாக்கள் 'தாமிரபர்ணீ அருசிகு' ஆறு நதிகளின் ஜலத்தைக் குடிக்கும் மனிதர்களுக்கு நாராயணனிடத்தில் தடையற்ற பக்தி உண்டாகும்]

86 த்விதீயே து பரார்த்தேஸ்மிந் திநே தவாத்யேஸ்த ஸத்தமே |
மநவாந்தரே வர்த்தமாநே த்வஷ்டாவிம்சே சதுர்யுகே ||
கலேராதௌ மாஸி ராதே காவ்யவாரே குளீரகே |
பௌர்ணமாஸ்யாம விசாகாக்யே தாரே மஹதி சோபநே ||
ப்ராஜாபதேர் ஜந்மயோகீ சடகோப இதி ஸ்ம்ருத: |
மதபக்தோஸ்ஹம் பவிஷ்யாமி வேதம் த்ராவிடதாம் ச்ருதீ ||

[பிரமனிடம்) இந்த இரண்டாவது பரார்த்தத்தில் சிறந்ததான முதல் தினத்தில், நடக்கும் (வைவஸ்வத) மந்வந்தரத்தில், இருபத்தெட்டாவது சதுர்யுகத்தில் கலியின் தொடக்கத்தில் வைகாசி மாதத்தில் வெள்ளிக்கிழமை கடக லக்னத்தில், பௌர்ண மாஸ்யையில், மிகமங்களமான விசாகநக்ஷத்திரத்தில், (காச்யப) ப்ரஜாபதியின் மறுபிறப்பான காரிக்குப் பிள்ளையாய் வேதம் தமிழ் செய்வதற்காக சடகோபன் எனப்படும் பக்தனாக ஆவேன் நான்.]

87. தாம்ரபாண்யுத்தரே தடே நாகதக்ஷேத்ரே ஜநிஷ்யதி
[தாம்ரபர்ணியின் வடக்கரையில் குற்றமற்ற க்ஷேத்திரத்தில் பிறப்பார்.]

88. கிரீடீ த்வத்ரிணீஸ்ஸ் த்வம் கத்வாஸ்த்ர புஜகாதிப |
ஸாவிலாஸாஷாசு ஸமேவேஷாம் நித்யமேவ பராஸ்யஸி ||
சடகோப மூர்த்திர்தாம் ஸம்ப்ராப்ய த்ரிதசேச்வர: |
தாமரபாணீதடம் ப்ராப்ய ரக்ஷிஷ்யதி கிலாக் ஜகத் ||
அத்ர வேதாஸ் ஸமஸ்தாச்ச த்ரீவிடத்வமுபாகதா: |
வேதயிஷ்யதி தேவேசம் ஸகலர் அபி மாதவம் ||

86, 87, 88, 89. திருக்குருகூர் மஹாத்மயம்.

[தூக்கமில்லாத திருவக்கதாபூவாரேன்' என்று (திருக்குருகூர்) திருப்புளியாழ்வாரைக் கண்டு விருப்பங்கொண்டு எல்லோருக்கும் எப்போதும் அளிப்பாரை. தேவதேவனை பரமன் சடகோப முனிவராகி எல்லா மனிதனையும் காப்பாற்றுபவர். இந்த எல்லா வேதங்களும் தமிழ் பாஷையிலேயாக்கி, அங்கங்கள், உபாங்க ஞானங்களோடு கூடி தேவதேவனை யாதவனை தெரிவிக்கும்.]

89. அஸ்தி பாண்ட்யமஹாதேசே குருகாநகரீ சுபா |
தாம்ரபர்ணீ நதீதீரே ஸ க்ஷாத்ர த்ருஷ்டோ ஹ்ருடதோகக்ஷ: ||

[பெருமைபெற்ற பாண்டியதேசத்தில தாமபரணி நதிக்கரையில மங்களமான திருக்குருகூர் உள்ளது. (அங்கு) பரமபுருஷன் தேரே காணப்பட்டான் என்கிறது.]

90. ஸ்ரீதராயாதிகுரவே

[ஆதிகுருவான ஸ்ரீதரனுக்கு]

91. ஸ ஆசார்யவம்சோ ஜ்ஞேய: | ஆசார்யாணமஸாவஸாவிதி
ஆபகவத்த:

[பகவானிலிருந்து தொடங்கி, 'இவர், இவர்' என்று (ஒருவர் விடாமல்) ஆசாரியர்களுடைய அந்த குருபரம்பரை அறியத்தக்கது.]

92. பரித்ராணாய ஸாதூநாம் விநாஶாய ச துஷ்க்ருதாம் |
தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே ||

[சாதுக்களை ரக்ஷிப்பதற்கும், தீயவர்களை அழிப்பதற்கும், வைதிக தர்மத்தை நிலை நிறுத்துவதற்கும், யுகந்தோறும் பிறக்கின்றேன்.]

93. விஷ்ணோரர்ச்சாவதாரேஷு லோஹபாவம் கரோதி ய: |
யோ குரௌ மாநுஷம் பாவம் உபௌ நரகபாதிநௌ ||

[விஷ்ணுவின் அர்ச்சாவதாரங்களில் 'உலோகம்' என்னும் நினைவையும் ஆசாரியனிடத்தில் 'மனிதன்' என்னும் நினைவையும் கொள்ளுமவர்களிருவரும் நரகத்தில் விழுவர்.]

91 ரஹஸ்யாம்நாயப்ராஹ்மணம். 92. கீதை 4 8
93. ப்ரஹ்மாண்ட புராணம்.

94. அநந்தபாரம் பஹுவேதிதவ்யம்
அல்பச்ச காலோ பஹவச்ச விக்நா: |
யத் ஸாரபூதம் ததுபாஸிதவ்யம்
ஹம்ஸோ யதா க்ஷீரமிவாம்புமிச்ரம் ||

[கரைகாணமுடியாதனவாக பல சாஸ்திரங்கள் அறியத்தக்கவை. காலமோ மிகக் குறைவு, இடையூறுகளோ பல; ஆகையால், பாலுடன் கலந்த நீரில் பாலைப்பிரித்துண் அன்னம்போல, சாஸ்திரங்களில் ஸாரமானதைச் சேதனன் எடுத்துக்கொள்ள வேண்டியது.]

95. அஸாரமல்பஸாரஞ்ச ஸாரம் ஸாரதரம் த்யஜேத் |
பஜேத் ஸாரதமம் சாஸ்த்ரே ரத்நாகர இவாம்ருதம் ||

[சாஸ்திரங்களில், ஸாரமற்றதையும், குறைந்த ஸாரமுள்ளதையும், ஸாரமுள்ளதையும், (அதைக்காட்டிலும்) அதிகஸாரமுள்ளதையும் விடவேண்டியது, (எல்லாவற்றையும் காட்டிலும்) மிக அதிகஸாரமுள்ளதையே கடலில் அமுதத்தைப்போலே ஆச்ரயிக்கவேண்டியது.]

96 த்யாகேந ஜபேந ஹோமேந பக்த்யா பஜநயர்ச்சயேந முதா |
உபாயோபேயபாவேந தமேவ சரணம் வ்ரஜேத் ||

[(ஆசாரியனை சிஷ்யன்) தியாகிக்கக்கடவன்; ஜபிக்கக்கடவன்; பக்தியோடு வணங்கக்கடவன்; பஜனம் செய்யக்கடவன்; உகப்புடன் அர்ச்சிக்கக்கடவன்; அவனையே உபாயமாகவும், ப்ராப்யமாகவும் நினைத்து சரணமடையக்கடவன்.]

97 ஸித்திர்பவதி வா நேதி ஸம்சயோச்யுத ஸேவிநாம் |
ந ஸம்சயோஸ்தி தத்பக்த பரிசர்யா ரதாத்மநாம் ||

[அச்சுதனைப்பற்றினோர்க்கு மோக்ஷஸித்தி உண்டோ இல்லையோ என்பதில் ஸந்தேஹமுண்டு, அவனுடைய பக்தர்களின் கைங்கரியத்தில் ஈடுபட்டவர்களுக்கு மோக்ஷஸித்தியில் ஐயமில்லை]

98. குருமூர்த்யா ஸ்திதஸ் ஸாக்ஷாத் பகவாந் புருஷோத்தம: |
உத்தாரயதி ஸம்ஸாராத் ததுபாயப்லவேந து ||

---

94. உத்தரகீதை 8-1, 95. [illegible] ஸாரத்தில் காசிகை. 96. ஸாத்வதஸம்ஹிதை. 97. சாண்டில்ய ஸ்ம்ருதி 1-95.

[ஆசிரியனிடமிருந்து பகவானையும் [illegible] பாபிகளுக்கு தானாகவே [illegible] ஸம்ஸாரிகளை [illegible] திருத்த [illegible]]

99. பராஸ்ய ஸக்திர் விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீ
ஜ்ஞானபலக்ரியா ச।

[இந்தப் பரமாத்மாவுக்கு பலவகைப்பட்டதும் மேலானதுமான சக்தியும், இயற்கையான ஞானமும், பலமும், (ஸ்ருஷ்டித்தல் முதலிய) காரியங்களும் உண்டென்று அறியப்படுகிறது.]

100. மந: பூர்வோ வாகுத்தர:

[முதலில் மனஸ்ஸும் அதற்குப் பிறகு வாக்கிந்திரியமும் பரவர்த்திக்கின்றன.]

101. பாதயேஷு தூரகா: ஸ்துத்யா: பரே யேஷு பித்ராதய:।
சாயாந்தே தாஸப்ருத்யாச்ச கதாசந புத்ரகா:॥

[ஆசாரியர்கள் சேர்ந்து இருக்கத்தக்கவர்கள், தமப்பர்களும் உறவினர்களும் இருக்கத்தக்கவர்கள்; (அர்ச்சனை செய்யவேண்டிய) காரியமுடிந்தவுடன் (நமக்கு) பிறிதுபயர்களும், வேலைக்காரர்களும் இருக்கத்தக்கவர்கள்; (நம்) பிள்ளைகள் ஒருபோதும் (கமமால) இருக்கத்தக்கவரல்லர்]

102. ந தேஹம் ந ப்ராணாந் ந ச ஸுகமசேஷாபிலஷிதம்
ந சாத்மாநம் நாந்யத் கிமபி தவ சேஷத்வவிபவாத்।
பஹிர்பூதம் நாத க்ஷணமபி ஸஹே யாது சததா
விநாசம் தத்ஸத்யம் மதுமதந விஜ்ஞாபநமிதம்॥

[எம்பெருமானே! உனக்கு அடிமைப்பட்டிருக்கையாகிற செல்வத்திற்குப் புறம்பான சரீரத்தை, ஒரு கணப்பொழுதும் ஸஹிக்கமாட்டேன்; (அபிமதியான) ப்ராணனையும் ஸஹிக்கமாட்டேன்; எல்லாரும் இச்சிக்கும் ஸுகத்தையும் பொறுக்கமாட்டேன்; (சேஷத்வமற்ற) ஆத்மாவையும் ஸஹிக்கமாட்டேன்; வேறு எதை

99. ச்வே-6. 100 தைத்-ஸம் 7-5-3. 102. ஸ்தோ-ர-57.

யும் பொறுக்கமாட்டேன்; [மேகதமற்ற முன் சொன்னவை பொய்யாய்) உருமாயாது போகட்டும். மதுவைக் கொன்ற எம் பிரானே! இது உண்மையானது; இது (என்) விண்ணப்பம்.]

103. 17-வது ப்ரமாணம் காண்க.

104. தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந் |
அக்ஷிபாம்யஜஸ்ரமஶுபாநாஸுரீஷ்வேவ யோநிஷு ||

[(நான்) த்வேஷிப்பவர்களும், கொடூரமானவர்களும், மனிதர்களுள் கீழ்மையானவர்களும், சுபமற்றவர்களுமான அவர்களை ஸம்ஸாரத்தில், அதிலும் அஸுரயோநிகளில் எப்போதும் தள்ளுகிறேன்.]

105. தஸ்மை நமோ மதுஜிதங்க்ரிஸரோஜ தத்வ
ஜ்ஞாநாநுராக மஹிமாதிஶயாந்த ஸீம்நே |
நாதாய நாதமுநயேऽத்ர பரத்ர சாபி
நித்யம் யதீயசரணௌ ஶரணம் மதீயம் ||

[இவ்வுலகத்திலும், மேலுலகத்திலும், எப்போதும் எந்த ஸ்ரீமந் நாதமுனிகளுடைய திருவடிகளே எனக்குப் புகலிடமோ, மதுவை நிரஸித்த எம்பெருமானுடைய திருவடித்தாமரைகளைப் பற்றின உண்மை அறிவினுடையவும், அன்பினுடையவும், பெருமேன்மையின் முடிவே எல்லையாயிருப்பவரும் (எனக்கு) நாதராயிருப்பவருமான அந்த நாதமுனிகளுக்கு நமஸ்காரம்.]

106. அவஶேநாபி யந்நாம்நி கீர்த்திதே ஸர்வபாதகை: |
புமாந் விமுச்யதே ஸத்ய: ஸிம்ஹத்ரஸ்தைர் ம்ருகைரிவ ||

[தன் வசத்திலில்லாதபோதும் எந்த பகவானுடைய திருநாமம் கூறக் கேட்கப்பட்டவனில், சிங்கத்தைக்கண்டு பயந்த ஓநாய்களிடமிருந்து விடுபடுவதுபோலே மனிதன் உடனே விடுபடுகிறானோ....]

107. ஸ த்வாஸக்தமதி: க்ருஷ்ணே தச்யமாநோ மஹோரகை: |
ந விவேதாத்மநோ காத்ரம் தத்ஸ்ம்ருத்யாஹ்லாத ஸம்ஸ்தித: ||

104. கீதை 16-19. 105. ஸ்தோ-ர-2. 106. வி-பு 6-8-19.
107. வி-பு 1-17-39.

[மற்ற உபாயங்களிலே அதிகாரமில்லாமையை, ஈஸ்வரனிடத்திலே பக்தியைச் செலுத்தினவனுமான அந்த பரமாத்மாவை, பக்தர்களை விடுவிக்குமவனை ஆகத்திலே நிலைநிறுத்தவரும், தன்னுடைய உடைமையை அறியவில்லை.]

108. அஹமஸ்ம்யபராதாநாமாலயோऽகிஞ்சநோऽகதி: |
த்வமேவோபாயபூதோ மே பவேதி ப்ரார்த்தநாமதி: ||
ஸரணாகதிரித்யுக்தா ஸா தேவேऽஸ்மிந் ப்ரயுஜ்யதாம் ||

["நான் குற்றங்களுக்கு ஓர் இருப்பிடமாயிருக்கிறேன். (வேறொன்றும் கைமுதலற்றவனாய்) ஒரு உபாயமுமற்றவனாயிருக்கிறேன்; (வேறு வழியற்ற) வேறு கதியில்லாதவனாக இருக்கிறேன். நீயே எனக்கு உபாயமாக ஆவாயாக" என்று பிரார்த்திக்கும் புத்தியே சரணாகதியெனப்படுகிறது. அது இந்த பகவான் விஷயத்தில் செய்யப்படட்டும்.]

109. ந தர்மநிஷ்டோऽஸ்மி ந சாத்மவேதீ
ந பக்திமாம்ஸ்த்வச்சரணாரவிந்தே |
அகிஞ்சநோऽநந்யகதி: ஸரண்ய |
த்வத்பாதமூலம் ஸரணம் ப்ரபத்யே ||

[சரணமடைவதற்குரிய எம்பிரானே! (அடியேன்) கர்மயோகத்தில் நிலைநின்றவன் அல்லேன்; ஆத்மஜ்ஞானமும் உடையேனல்லேன்; உன் திருவடித் தாமரைகளில் பக்தியை உடையவன் அல்லேன்; ஒரு உபாயமுமற்றவனாய், வேறு புகலற்றவனுமான அடியேன், உன் திருவடித் தாமரைகளை உபாயமாக நிச்சயிக்கிறேன்.]

109*. அநந்யதேவத்வமியம் க்ஷமா ச
பூமௌ ச ஸய்யா நியமஸ்ச தர்மே |
பதிவ்ரதாத்வம் விபலம் மமேதம்
க்ருதம் க்ருதக்நேஷ்விவ மாநுஷாணாம் ||

[(ஸ்வாமி ராமனைத்தவிர) வேறொரு தெய்வமறியாதிருக்கை, இந்தப் பொறுமை, வெறுந்தரையில் படுக்கை, அறம் வழுவாதிருக்கை,

108 அஹிர்புத்ந்யஸம்ஹிதை 37-30. 109 ஸ்தோத்ர 22.
109* ஸுந்தர 28.12.

பதிவிரதைத் தன்மை ஆகிய இந்த என்னுடைய குணங்களெல்லாம் செய்நன்றி கொன்ற மனிதர்க்குச் செய்த செயல்போலே வீணாயின.]

110. ப்ராப்த ராஜ்யஸ்ய ராமஸ்ய வால்மீகிர் பகவாந் ருஷி: ।
சகார சரிதம் க்ருத்ஸ்நம் விசித்ரபதமாத்மவாந் ॥

[ஞானாதி குணங்களோடே கூடினவரும் நெஞ்சையடக்கியவருமான வால்மீகிமஹரிஷி, ராஜ்யத்தையடைந்த ராமபிரானுடைய சரித்திரம் முழுவதையும், விசித்திரமான பதங்களையுடைய காவியமாக இயற்றினர்.]

111 ஏதத் ஸாம காயந்நாஸ்தே । ஹாவு ஹாவு ஹாவு ।
அஹமந்நமஹமந்நமஹமந்நம் । அஹமந்நாதோஹமந்நாதோ -
ஹமந்நாத: ।

[முக்தாத்மா (பரமாத்மாவையடைந்து) இந்த ஸாமத்தைப் பாடிக் கொண்டிருக்கிறான் - ஹாவு ஹாவு ஹாவு; நான் (பரமாத்மாவுக்கு) அன்னமாயிருப்பவன், அன்னமாயிருப்பவன், அன்னமாயிருப்பவன், நான் (பரமாத்மாவின் ப்ரீதியாகிற) அன்னத்தை புஜிப்பவன்; அன்னத்தைப் புஜிப்பவன், அன்னத்தைப் புஜிப்பவன்]

112 பாணௌ க்ருஹீத்வா விதுமம் ஸாதயிஞ்ச மஹாயஶா: ।
ஜ்யோதீம்ஷ்யாதித்யவத் ராஜந் குரூந் ப்ரச்சாதயந் ஶ்ரியா ।

[பெருங்கீர்த்தியுள்ள கண்ணன் வில்லையும், வாளையும் கையில் பிடித்துக்கொண்டு, சூரியன் மற்ற ஜோதிகளை மழுங்கச் செய்வதுபோலே, கௌரவர்களைத் தன் தேஜஸ்ஸாலே மழுங்கச் செய்துகொண்டு வந்தார்]

113. தருணௌ ரூபஸம்பந்நௌ ஸுகுமாரௌ மஹாபலௌ ।
புண்டரீக விஶாலாக்ஷௌ சீரக்ருஷ்ணாஜிநாம்பரௌ ॥

[(ராமலக்ஷ்மணர்கள்) வாலிபமானவர்கள்; அழகு நிறைந்தவர்கள்; ஸௌகுமார்யத்தை உடையவர்கள்; அதிகமான பலமுள்ளவர்கள்.

110. ரா-பா 4 1. 111. தை-ப்ருகு 10-6. 112. பா-உத் 94-45. 113. ரா-ஆ 19-14.

தாமரைபோன்ற அகன்ற கண்களை உடையவர்கள்; மரவுரியையும மான்தோலையும உடுத்தவர்கள்.]

114. தேஷாம் ஜ்ஞாநீ நித்யயுக்த: ஏகபக்திர் விசிஷ்யதே।
ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோऽத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய:॥
[(என்னுடன்) எப்போதும் சேர்ந்திருப்பவனும், என்னிடம் மட்டும் அன்பு செய்பவனுமான ஜ்ஞானி அந்த நால்வரில் மேலானவன். நான் ஜ்ஞானிக்கு மிகவும் பிரியனன்றோ. (அப்படியே) அவனும் எனக்குப் பிரியமானவன்.]

115. மம மத்பக்தபக்தேஷு ப்ரீதிரப்யதிகா பவேத்।
தஸ்மாந் மத்பக்தபக்தாச்ச பூஜநீயா விசேஷத:॥
[என் பக்தனிடம் பக்தியுள்ளவர்களிடத்தில் எனக்கு அதிகமான அன்பு உண்டு. ஆகையால் என் பக்தனிடம் பக்தியுள்ள அவர்களும் விசேஷமாகப் பூஜிக்கத் தக்கவர்களே.]

116. ந தே ரூபம் ந சாகாரோ நாயுதாநி ந சாஸ்பதம்।
ததாபி புருஷாகாரோ பக்தாநாம் த்வம் ப்ரகாசஸே॥
[(உன்னுடைய திவ்யாத்ம ஸ்வரூபமானது உனக்காக இல்லை, (ஸ்வதந்த்ரமான அது ஆச்ரிதர்களுக்காகப் பரதந்த்ரமாகவும் ஆகும் என்று தாத்பர்யம்) திவ்யமங்கள விக்ரஹமும் உனக்காயிராது; திவ்யாயுதங்களும் உனக்காயிருக்கவில்லை; இருப்பிடமான வைகுண்டம் முதலியவைகளும் உனக்காயிருக்கவில்லை; (இவையெல்லாம் உன் அடியார்களுக்காயிருக்கும் என்று பொருள்) ஆகாரங்களையுடைய உடைமையான நீ, இப்படி ஆச்ரிதபாரதந்த்ரமான ஸ்வரூபரூபகுண விபூதிகளை உடையவனாயிருக்கும்போதிலும், புருஷோத்தமத்வம் ஸம்பந்தப்பட்ட ஸர்வாதிகனாயிருக்கும் தன்மையுடன் விளங்குகின்றாய்.]

117. 51-வது ப்ரமாணம் காண்க.

118 பசுர் மநுஷ்ய: பக்ஷீ வா யே ச வைஷ்ணவஸம்ச்ரயா:।
தேநைவ தே ப்ரயாஸ்யந்தி தத் விஷ்ணோ: பரமம் பதம்॥

114. கீதை 7-17. 115 பாத்ம-ஆசல 116 23 116 ஜிதந்தே 1-5.
118. சாண்டில்யஸ்ம்ருதி 1-15.

[பிசாசர், மனிதர்கள், பக்ஷிகள் வானரங்கள் இவைகளை லோகத்தில் பார்த்திருக்கின்றோமல்லவா, அந்தச் சீலமே அவர்கள் விஷ்ணுவினுடைய அந்த உயர்ந்த ஸ்தானத்தை அடைகின்றனர்.]

119. பூர்வபாஷீ ப்ரஸந்நாத்மா

[முதலில் பேசுமவனாய், தெளிந்த மனத்தையிருப்பவன்.]

120. விமலமதிரமத்ஸர: ப்ரஶாந்த:
ஸுசிசரிதோऽகில ஸத்வமித்ர பூத: |
ப்ரியஹித வசனோऽஸ்தமானமாயோ
வஸதி ஸதா ஹ்ருதி தஸ்ய வாஸுதேவ: ||

[அழுக்கற்ற புத்தியையுடையவனாய், மாத்ஸர்யமற்றவனாய், மிகுதியான அடக்கத்தையுடையவனாய், பரிசுத்தமான ஒழுக்கத்தையுடையவனாய், அனைத்துயிர்க்கும் நண்பனாய், இனியதும் நல்லதுமான வார்த்தையையுடையவனாய், ப்ரக்ருதியைப்பற்றிய மமதைப் பெருமிதமற்றவனாயுள்ளவனுடைய இருதயத்தில் வாஸுதேவன் எப்போதும் வஸிக்கிறான்.]

121. த்ரவந்தி தைத்யா: ப்ரணமந்தி தேவதா:
நஶ்யந்தி ரக்ஷாம்ஸ்யபயாந்தி சாரய: |
யத் கீர்த்தநாத் ஸோऽத்புத ரூபகேஸரீ
மமாஸ்து மாங்களயவிவ்ருத்தயே ஹரி: ||

[எந்தப் பரமபுருஷனின் கீர்த்தனம் செய்வதால் அசுரர்கள் ஓடுகின்றனரோ, தேவர்கள் வணங்குகின்றனரோ, ராக்ஷஸர்கள் அழிகின்றனரோ, எதிரிகள் புறமுதுகு காட்டுகின்றனரோ, அற்புதமுள்ள அந்த நரசிங்கனான ஹரி என் மங்களம் வளர்வதின் பொருட்டு ஆகட்டும்.]

122&123. ஸ பித்ரா ச பரித்யக்தஸ் ஸுரைச்ச ஸமஹர்ஷிபி: |
த்ரீன் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ ஶரணம் கத: ||

---

120. வி-பு 3-7 24. 121. விஷ்ணுதர்மம் 43-28.
122&123. ஸு-கா 38-33.

[அந்தக் காகாசுரனை, தந்தையினாலும், (தாயினாலும்) மஹரிஷிகளோடு கூடிய தேவர்களாலும் கைவிடப்பட்டவனாய், மூன்று உலகங்களையும் சுற்றித்திரிந்து அந்த ராமனையே சரணமடைந்தான்]

124 ஸ வேஷ மேவ லோகாநாம் பிதா மாதா ச மாதவ:
கச்சத்வமேநம் ஶரணம் ஶரண்யம் புருஷர்ஷபா: ॥

[புருஷச்ரேஷ்டர்களே! எல்லா உலகங்களுக்கும் தந்தையும் தாயும் லக்ஷ்மீநாதனே. சரணமடைவதற்குரிய இவனை சரணமடையுங்கள்.]

125. பிதாஹமஸ்ய ஜகதோ மாதா தாதா பிதாமஹ: ।
வேத்யம் பவித்ரமோங்கார ருக்ஸாம யஜுரேவ ச ॥

[இந்த உலகிற்கு தாயும், தந்தையும், தாதாவும், பாட்டனும், வேதத்தில் அறியப்படுவதும், பரிசுத்தப்படுத்துவதும், ப்ரணவமும், ருக் யஜுஸ் ஸாமங்களும் நானே.]

126. பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே ।
வாஸுதேவஸ் ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப: ॥

[பல புண்ய ஜன்மங்களுக்குப் பின், ஞானியானவன் 'வாஸுதேவனே (எனக்கு) எல்லாம்' என்று என்னை உபாஸிக்கிறான். அப்படிப்பட்ட மஹாபுருஷன் மிகவும் துர்லபன்]

127 அபி சேத் ஸுதுராசாரோ பஜதே மாமநந்யபாக் ।
ஸாதுரேவ ஸ மந்தவ்ய: ஸம்யக் வ்யவஸிதோ ஹி ஸ: ॥

[மிகவதிகமான துராசாரத்தை உடையவனாயினும், வேறொன்றிலும் ஈடுபாடில்லாமல் என்னிடம் பக்தி செலுத்துகிறானேயானால், அவன் மிகச்சிறந்த வைஷ்ணவனாகவே எண்ணத்தக்கவன், ஏனெனில் நல்ல உறுதிபூண்டவனன்றோ அவன்]

128. மநஸாநிஷ்டசிந்தநம்
[மனத்தினால் (பிறருக்கு) தீமை நினைப்பது]

124 பாரத-ஆர 192-56. 125 கீதை 9-17. 126 கீதை 7-19
127 கீதை 9-30.

129. அபகாரிஷ்வபி ஸதா ஸாது: ஸத்வேவ வர்த்ததே
[அபகாரிகளிடத்தும் நல்லோன் எப்போதும் நல்லவனாகவே யிருக்கிறான்]

130. பாபாநாம் வா சுபாநாம் வா வதார்ஹாணாம் ப்லவங்கம!
கார்யம் கருணமார்யேண ந கச்சிந்நாபராத்யதி ||
[வானர! பாபிகளையேனும், புண்யமுள்ளவர்களையேனும், கொலைக் குத் தகுந்தவர்களையேனும் ஆர்ய குணமுடையவனால் (அவர் விஷயத் தில்) கருணை காட்டப்படவேண்டும். அபராதம் செய்யாதவன் ஒருவனுமில்லையே.]

131. மயி த்வேஷாநுபந்தோ(அ)பூத் ஸம்ஸ்துதாப்யுதயே தவ|
மத்பிதுஸ் தத்க்ருதம் பாபம் தேவ தஸ்ய ப்ரணச்யது ||
[உன்னைத் துதிப்பதில் ஈடுபட்ட என்னிடத்தில் உண்டான த்வேஷத் தால் என் தந்தைக்கு ஏற்பட்ட பாபம் போகட்டும்.]

132. மாதாபித்ருஸஹஸ்ரேப்யோ வத்ஸலதரம் சாஸ்த்ரம்
[ஆயிரம் தாய்தந்தையரினும் அதிகமான வாத்ஸல்யத்தையுடையது சாஸ்திரம்.]

133. பரீக்ஷ்ய லோகாந் கர்மசிதாந்
ப்ராஹ்மணோ நிர்வேதமாயாந் நாஸ்த்யக்ருத: க்ருதேந|
தத்விஜ்ஞாநார்த்தம் ஸ குருமேவாபிகச்சேத்
ஸமித்பாணி: ச்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம் ||
[அங்கங்களோடு கூடிய வேதங்களை அத்யயனம் செய்த ஒருவன் கர்மத்தால் அடையப்பெறும் உலகங்களை ஆராய்ச்சிசெய்து பார்த்து, 'நித்திய புருஷன் அநித்தியமான கருமத்தால் அடையப் பெறமாட்டான்' என்று வருத்தத்தை அடைகிறான், அவன் அப்புருஷனை அறிவதற்காக, ஸமித்தைக் கையிற்கொண்டவனும் வேதாந்தமறிந்தவனும், ப்ரஹ்மஸாக்ஷாத்காரம் பெற்றவனுமான ஆசிரியனையே அடையக்கடவன்.]

130. ரா-யு 116-44. 131. வி-பு 1-20-21. 133. முண்ட 1-2-12.

134. ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ
மத்த: ஸ்ம்ருதிர் ஜ்ஞாநமபோஹநஞ்ச ।
வேதைச்ச ஸர்வைரஹமேவ வேத்யோ
வேதாந்தக்ருத் வேதவிதேவ சாஹம் ॥

[எல்லாருடைய ஹ்ருதயத்திலும் நான் அமர்ந்திருக்கிறேன். என்னிடமிருந்தே நினைவும், ஜ்ஞானமும், மறதியும் உண்டாகின்றன. எல்லா வேதங்களாலும் அறியப்படுபவன் நானே. வேதத்தில் சொல்லப்பட்ட பலன்களைக் கொடுப்பவனும், வேதத்தை அறிபவனும் நானே.]

135. ஹதோऽஸ்மி யதி மாமேவம் பகவாநபி மந்யதே ।
[(பரத்வாஜரே!) தேவரீரும் என்னை இப்படி நினைத்தீரானால் நான் கொல்லப்பட்டவனேயாவேன்.]

136. அபயேஷ மாம் கமலபரிக்ரஹேண
தோஷாஸ்பதீபூதமதோஷதுஷ்டம் ।
ஸாத்தாவமாநோபஹதம் நிகஸ்து
தஜ்ஜந்ம யத் ஸாதுபஹிஷ்க்ருதம் ஸ்யாத் ॥

[கம்ஸனோடு சம்பந்தத்தால் தோஷத்திற்கு இருப்பிடமாயிருக்கும் என்னையும், தோஷமில்லாதவனாகப்படி செய்வாயாக கமலக்கண்ணனே! நல்லோரால் தள்ளப்பட்டதும், அவமானத்தால் அடிக்கப்பட்டதுமான அந்த ஜன்மத்தைச் சுடு.]

137. ஸக்ருத் த்வதாகாரவிலோகநாசயா
த்ருணீக்ருதாநுத்தம புக்திமுக்திபி: ।
மஹாத்மபிர் மாமவலோக்யதாம் நய
க்ஷணேऽபி தே யத்விரஹோऽதிதுஸ்ஸஹ: ॥

[எந்தப் பெரியோர்களின் பிரிவானது உனக்கு ஒரு கணப்பொழுதும் மிகவும் பொறுக்கமுடியாததாயிருக்கிறதோ, ஒருதடவை உன்னுடைய திருமேனியைக் காணவேணும் என்னும் ஆசையினால்,

---

134. கீதை 15-15. 135. ரா-அ 90-15. 136. வி-பு 5-17-31.
137. ஸ்தோ-ர-56.

தாங்கள் போல நினைக்கப்பட்ட மேலான போகங்களையும், மோக்ஷத்தையும் உடையவர்களான (அதாப்) பெரியோர்களால் கடாக்ஷிக்கத் தக்கவர்களாயிருக்குந் தன்மையை (அடையும்படி) என்னைச் செய்தருளவேண்டும்.]

138. த்ரைவித்ய வ்ருத்தஜந மூர்த்தவிபூஷணம் யத்
ஸம்பச்ச ஸாத்விகஜநஸ்ய யதேவ நித்யம் |
யத்வா ஸரண்யமஸரண்யஜநஸ்ய புண்யம்
தத் ஸம்ச்ரயேம வகுளாபரணாங்க்ரியுக்மம் ||

[எந்த வைதிகப் பெரியோர்களின் தலைக்கலங்காரமாயிருக்கிறதோ, ஸாத்விகஜனங்களுக்கு எது நித்யமான செல்வமாயுள்ளதோ, புகலற்ற மனிதர்களுக்கு எது புகலாயிருக்கிறதோ, புண்ணியமான அந்த வகுளாபரணரின் திருவடியிணையை ஆச்ரயிக்கக் கடவோம்.]

139. குரு: பிதா குருர் மாதா
[குருவே தந்தையும், குருவே தாயுமாவான்]

140. யோऽந்யதா ஸந்தமாத்மாநமந்யதா ப்ரதிபத்யதே |
கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா ||

[பகவானுடைய உடைமையாயிருக்கும் ஆத்மாவை, எவனொருவன் தனக்குச் சொந்தமாக நினைக்கிறானோ, ஆத்மாவை அபஹரிப்பவனான அந்தத் திருடனால் செய்யப்படாத பாபம் எது]

141. அநந்யஸாத்யே ஸ்வாபீஷ்டே மஹாவிச்வாஸபூர்வகம் |
ததேகோபாயதா யாச்ஞா ப்ரபத்தி: சரணாகதி: ||

[தனனுடைய இஷ்டம் வேறொன்றாலும் ஸாதிக்கவொண்ணாததாயிருக்கும்போது, மஹாவிச்வாஸத்தை முன்னிட்டுக்கொண்டு அவனொருவனையே உபாயமாக இருக்கவேண்டுமென்று யாசிப்பது ப்ரபத்தி; அதுவே சரணாகதி.]

142. த்ரவ்யம் குணஸ்ததா கர்ம ஜாதிச் சேதஸ் ததாச்ரயா:
[த்ரவ்யம், குணம், கர்மம், ஜாதி, மனம் அதற்கு ஆச்ரயமான ஆத்மா.]

138. ஸ்ரீவைகுண்டஸ்தவம்-6. 140. பார-உத 42-35.
141. பாத்மஸம்ஹிதை-விஷ்வக்-ஸை.

143. த்வாவிமௌ புருஷௌ லோகே க்ஷரச்சாக்ஷர ஏவ ச।
க்ஷர: ஸர்வாணி பூதாநி கூடஸ்தோऽக்ஷர உச்யதே॥
உத்தம: புருஷஸ்த்வந்ய: பரமாத்மேத்யுதாஹ்ருத:।
யோ லோகத்ரயமாவிச்ய பிபர்த்யவ்யய ஈச்வர:॥
யஸ்மாத் க்ஷரமதீதோऽஹமக்ஷராதபி சோத்தம:।
அதோऽஸ்மி லோகே வேதே ச ப்ரதித: புருஷோத்தம:॥

[க்ஷரன் என்றும், அக்ஷரன் என்றும் லோகத்தில் புருஷர்கள் இருவிதமானவர்; எல்லா பூதங்களும் க்ஷரர்கள்; கூடஸ்தனை முக்தாத்மா அக்ஷரனெனப்படுகிறான். வேறொருவன் மூவுலகங்களிலும் புகுந்து (அவற்றை) தரிப்பவனாகவும், குறைவற்றவனாகவும், ஈச்வரனாகவும், பரமாத்மாவென்று சொல்லப்படுபவனாகவும் விளங்குகிறானோ அவன் புருஷோத்தமன் (முன் சொல்லப்பட்ட புருஷர்களைக்காட்டிலும்) வேறுபட்டவன். நான் க்ஷரத்தில் ஏற்படும் ஸம்ஸாரிபுருஷனைக்காட்டிலும் வேறுபட்டவனாயிருப்பதாலும், க்ஷரத்தில் ஏற்படத்தக்கவைகளற்ற முக்தபுருஷனைக்காட்டிலும் மேலானவனாயிருப்பதாலும், ச்ருதியிலும், ஸ்ம்ருதியிலும் புருஷோத்தமனென்று ப்ரஸித்தி பெற்றிருக்கிறேன்.]

144. த்ரவ்யாணி நவ தே விது:

[த்ரவ்யம் தொடங்கி திரவியங்கள் ஒன்பது என்பது வைசேஷிகர்களின் முடிவு]

145. தத்ர த்ரவ்யாணி ப்ருதிவ்யப்தேஜோ வாய்வாகாசகால
திகாத்மமநாம்ஸி நவைவ

[இப்பதார்த்தங்களில்-ப்ருதிவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம், காலம், திக், ஆத்மா, மனம் எனும் ஒன்பது பொருள்களே திரவியங்களாகும்.]

146. த்ருணகாஷ்டாபஹாரேண யோ தோஷ: பரிகீர்த்தித:।
ஸுவர்ணரத்நாபஹாரேऽபி தாவாநேவ பவேத் கதம்॥
கதாயஸ்வாபஹாரேண யோ தோஷ: பரிகீர்த்தித:।
ச்ரோத்ரியஸ்வாபஹாரேऽபி தாவாநேவ பவேத் கதம்॥

143. கீதை 15-16, 17, 18   145. தர்க்கஸங்க்ரஹம் 1-3.

ஆத்மவஸ்து யதோபாதிகம் ஆத்மேஸ்து பரிபடிமாந்।
தஸ்மாதஸ்யாபஹாரேண தோஷஸ்யாந்தோ ந வித்யதே॥

[புல், கட்டை ஆகியவைகளை அபஹரிப்பதால் யாதொரு தோஷம் உண்டாவதாகச் சொல்லப்படுகிறதோ, அதே தோஷமோ தங்கம், ரத்னம் ஆகியவற்றை அபஹரிப்பதாலும் உண்டாகுமோ? நீசனுடைய சொத்தை திருடுவதிலே யாதொரு தோஷம் சொல்லப் படுகிறதோ, அதே தோஷமே வேதமறிந்த ப்ராஹ்மணனின் சொத்தைத் திருடுவதாலும் உண்டாக முடியுமோ? ஆத்ம வஸ்துவோ விசேஷமிக்கவொன்றாகும்; ஆத்மாவை உடையவனோ பரமபுருஷன்; ஆகையால் இதைத் திருடும்போது தோஷத்துக்கு எல்லையில்லை]

147. ஸத்யஞ்சாந்ருதஞ்ச ஸத்யமபவத்

[விகாரமற்றதாகையாலே 'ஸத்யம்' (உள்ளது) எனப்படும் ஆத்மா வாகவும், விகாரமுள்ளதாகையால் 'அந்ருதம்' (இல்லாதது) எனப்படும் அசித்தாகவுமாகியும் விகாரமற்றதாகவேயிருந்தது ப்ரஹ்மம்.]

148. நாஸதோ வித்யதே பாவோ நாபாவோ வித்யதே ஸத:।
உபயோரபி த்ருஷ்டோந்தஸ் த்வநயோஸ் தத்வதர்சிபி:॥

[இல்லாததான தேஹம் உள்ளதாகாது, உள்ளதான ஆத்மாவுக்கு இன்மை இல்லை; தத்வஞானிகளால் இவ்விரண்டிற்கும் இவ் விதமாக முடிவுகாணப்பட்டிருக்கிறது.]

149. பஞ்சபூதாத்மகம் வஸ்து
[ஐந்து பூதங்களாலான பொருள் தேஹம்.]

150. க்ஷரம் த்வவித்யா ஹ்யம்ருதம் து வித்யா
வித்யாவித்யே ஈசதே யஸ்து ஸோऽந்ய.

[அழியும் அசித்வஸ்து 'அவித்யை' எனப்படுகிறது; அழியாத ஆத்மா 'வித்யை' எனப்படுகிறது; வித்யையையும், அவித்யையையும் எவன் நியமிக்கிறானோ அவன் அவர்களிலும் வேறுபட்டவன்.]

147. தைத்-ஆ 6-3. 148. கீதை 2-16. 150. ச்வே 5-1.

151 ஆத்மாநமஸ்ய ஜகதோ நிர்லேபமகுணாமலம்।
பிபர்த்தி கௌஸ்துபமணிஸ்வரூபம் பகவாந் ஹரி:॥

[பரிசுத்தனாகவும், அழுக்கற்றவனாயும் இருக்கும் இவ்வுலகத்துக்கு ஆத்மாவான ஜீவனை பகவான் ஹரியானவர் மார்பில் கௌஸ்துபமணியின் ரூபத்தில (மார்பில்) தரிக்கிறார்]

152. அகாரார்த்தாயைவ ஸ்வமஹமத மஹ்யம் ந நிவஹா
நராணாம் நித்யாநாமயநமிதி நாராயணபதம்।
யமாஹாஸ்மை காலம் ஸகலமபி ஸர்வத்ர ஸகலாஸ்
வவஸ்தாஸ்வாவிஸ்ஸ்யுர் மம ஸஹஜகைங்கர்யவிதய:॥

[அகாரப்பொருளாய அச்சுதனுக்கே நான் உடைமை; எனக்கு நான் உரியேனல்லேன்; அழிவற்றவர்களைப்போலே சேர்க்கின்றபடிமலர்களுக்கு அயநமாயிருக்கிறபடியாலே நாராயணபதம் என்னச் சொல்லுகின்றதோ, அவனுக்கு எல்லாக்காலமும், எல்லாவிடத்திலும், எல்லா அவஸ்தைகளிலும் என் கைங்கர்யங்கள் ஆவிர்ப்பவிக்கக்கடவன.]

153. அ இதி ப்ரஹ்ம
['அ' எனப்படுவது ப்ரஹ்மம்.]

154. பரத்ரவ்யேஷ்வபித்யாநம்
[பிறர் பொருளிலே ஆசைவைப்பது.]

155. ந ஜாது காம: காமாநாமுபபோகேந சாம்யதி।
ஹவிஷா க்ருஷ்ணவர்த்மேவ பூய ஏவாபிவர்த்ததே॥

[காமிகளுடைய காமம் அநுபவிப்பதாலே ஒருபோதும் சாந்தியடைவதில்லை; ஹவிஸ்ஸாலே (வளரும்) அக்னிபோல் மறுபடியும் வளர்கின்றது.]

156 அநாதி பகவாந் காலோ நாந்தோஸ்ய த்விஜ வித்யதே।

---

151. வி-பு 1-22-68. 152 அஷ்டச்லோகி. 153. பஹ்வ்ருச ஆரண்ய ப்ரச்நம்-2, அநு-2. 155. வி-பு 4-10-23. 156 வி-பு 1-2-26.

கண்—34

[பராசுமுனைவீர! பெருமை பொருந்தியதான கர்மம் அநாதியானது. இதற்கு முடிவுங் கிடையாது.]

157. அத்யர்க்காநலதீப்தம் தத் ஸ்தாநம் விஷ்ணோ மஹாத்மந:।
ஸ்வயைவ ப்ரபயா ராஜந் துஷ்ப்ரேக்ஷ்யம் தேவதாநவை:॥
தத்ர கத்வா புநர்நேமம் லோகமாயாந்தி பாரத॥

[மஹாத்மாவான விஷ்ணுவினுடைய அந்த ஸ்தானம் ஸூர்யனுடையவும், அக்னியுடையவும் ஒளியை விஞ்சியது அரசனே! அது தன்னுடைய ஒளியினாலேயே தேவர்களாலும், அஸுரர்களாலும் காண அரியது. பரதவம்சத்தில் உதித்தவனே! அங்கு போய் மறுபடியும் இவ்வுலகுக்குத் திரும்பிவருவதில்லை]

158. ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ।
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச:॥

[(பலவாறானமான) எல்லா தர்மங்களையும், வாசனையுடன் விட்டு, என்னை ஒருவனையே உபாயமாக அடை; நான் உன்னை எல்லாப் பாபங்களினின்றும் விடுவிக்கிறேன்; துக்கிக்காதே.]

159. ப்ராப்ய புண்யக்ருதாம் லோகம் உஷித்வா சாச்வதீ: ஸமா:।
சுசீநாம் ஸ்ரீமதாம் கேஹே யோகப்ரஷ்டோऽபிஜாயதே॥

[புண்ணியம் செய்தோரின் உலகையடைந்து நெடுங்காலம் வாழ்ந்து, பரிசுத்தியுடையவர்களும், செல்வமுடையவர்களுமான பெரியோர்களின் வீட்டில் யோகத்திலிருந்து நழுவியவன் பிறக்கிறன்.]

160. ஸமாத் பங்கஸ் தஸ்யாஸீத் தந்மமத்வாத்ருதாத்மந:।
ஸந்த்யக்த ராஜ்யபோகர்த்திஸ்வஜநஸ்யாபி பூபதே॥

[அரசனே! மானிடம் மமகாரங்கொண்ட மனத்தையுடைய அவனுக்கு, ராஜ்யம், பெருஞ்செல்வம், உறவினர் ஆகிய அனைத்தையும் விட்டவனாயிருந்தபோதிலும் ஸமாதிக்கு இடையூறு ஏற்பட்டது.]

157. பார-ஆநு 136-18&23. 158. கீதை 18-66 159. கீதை 6-41.
160. வி-பு 2-13-29.

161. பஹவோ துர்லபாச்சைவ யே த்வயா கீர்த்திதா குணா: |
முநே வக்ஷ்யாம்யஹம் புத்த்வா தைர் யுக்த: ச்ரூயதாம் நர: ||
[முனிவரே! உம்மால் கீர்த்திக்கப்பட்ட குணங்கள் கிடைத்தற்கரியவையும் பலவுமாயிருக்கின்றன. நான் தெளிந்து சொல்லுகிறேன். அந்த குணங்களோடு கூடிய மனிதனைக் கேட்பீராக]

162. ஆரப்யதே ந கலு விக்நபயேந நீசை:
ஆரப்ய விக்நவிஹதா விரமந்தி மத்யா: |
விக்நை: புந: புநரபி ப்ரதிஹந்யமாநா:
ப்ராரப்தமுத்தமகுணா ந பரித்யஜந்தி ||
[தாழ்ந்த குணத்தவர்கள் இடையூறுக்கு பயந்து காரியத்தை ஆரம்பிப்பதேயில்லை; ஆரம்பித்தபின் இடையூறு வந்து தடுத்தால் காரியத்தினின்றும் பின்வாங்குகின்றனர் மத்யமமான குணத்தையுடையவர்கள். பல இடையூறுகளால் பலமுறையும் மறுபடியும் தடுக்கப்பட்டாலும், தொடங்கிய காரியத்தை உத்தம குணத்தோர் கைவிடுவதேயில்லை]

163. யதோ வாசோ நிவர்த்தந்தே | அப்ராப்ய மநஸா ஸஹ |
ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந் | ந பிபேதி குதச்சந ||
[எந்த ப்ரஹ்மத்தினிடமிருந்து, மனத்துடன் கூடிய வாக்குகள், (அதை) அளவிட்டறியாமல் திரும்புகின்றனவோ, அந்தப் பரமாத்மாவின் ஆனந்தத்தை அறிந்தவன் எதனிடமும் பயப்பட மாட்டான்.]

164. தஸ்ய புத்ரா தாயமுபயந்தி ஸுஹ்ருதஸ்
ஸாதுக்ருத்யாம் த்விஷந்த பாபக்ருத்யாம்
[மோக்ஷமடையும் அம்மனிதனின் சொத்தைப் பிள்ளைகள் அடைகின்றனர்; புண்ணியத்தை அநுகூலர்கள் அடைகின்றனர்; பாபத்தை எதிரிகள் அடைகின்றனர்]

165. போக்தாரம் யஜ்ஞதபஸாம் ஸர்வலோக மஹேச்வரம் |
ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம் ஜ்ஞாத்வா மாம் சாந்திம் ருச்சதி ||

161. ரா-பா 1-7. 162. நீதிசதகம்-72 163 தை-ஆ 9-1.
164. சாட்யாயநசாகை. 165. கீதை 5-29.

[யஜ்ஞங்களையும், தவங்களையும் புசிப்பவனும், எல்லா உலகங் களுக்கும் மஹேச்வரனும், எல்லா ஜீவராசிகளுக்கும் நண்பனுமான என்னை அறிந்து சாந்தியை அடைகிறான்.]

166. தாரம் ப்ரகாசயேந்நித்யம்
[தாரத்தை எப்போதும் வெளிப்படுத்தவேண்டும்]

167. ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேந் மதுஸூதந:।
ஸாத்விகஸ் ஸ து விஜ்ஞேயஸ் ஸ வை மோக்ஷார்த்த சிந்தக:॥

[பிறந்துகொண்டிருக்கும்போது எந்த புருஷனை மதுஸூதனன் பார்க்கின்றானோ அவனே ஸத்வகுணமுடையவனென்று அறியத்தக்கவன். அவனே மோக்ஷபலத்தை நினைப்பான்]

168. தேவா: ஸேந்த்ராஸுமாயாந்தி தைத்யாஸ் ஸர்வே ஹதா ஸதா:।
ந பயம் வித்யதே கிஞ்சித் ஜிதம் பகவதா ஜகத்॥

[தேவர்கள் இருப்பிடம் நெருங்கினவர், அசுரர்களனைவரும் கொல்லப்பட்டொழிந்தனர்; இனி பயமொன்றுமில்லை, பகவானாலே உலகம் வெல்லப்பட்டது]

169. முக்தாநாம் லக்ஷணம் ஹ்யேதத் ச்வேதத்வீபவாஸிநாம்।
நித்யாஞ்ஜலிபுடா ஹ்ருஷ்டா நம இத்யேவ வாதிந:॥

[ச்வேதத்வீபவாஸிகளுக்கு எது லக்ஷணமோ, அதுவே முக்தர்களுக்கும் லக்ஷணமாகும்; அதாவது,—எப்போதும் அஞ்ஜலி செய்துகொண்டிருப்பார்கள்; (அதனால்) ஆனந்திப்பார்கள்; வாயால் 'நம:' என்றே சொல்லும் தன்மையுடையவர்களாயிருப்பார்கள்.]

170. ஸா ஹி ஸ்ரீரம்ருதா ஸதாம்
[நல்லோர்களுக்கு வேதமே அழியாச் செல்வமாகும்.]

171. சதுர்விம்சத்ஸஹஸ்ராணி ச்லோகாநாமுக்தவாந் ருஷி:।
ததா ஸர்க்கசதாந் பஞ்ச ஷட்காண்டாநி ததோத்தரம்॥

167. பார-சாந் 358 73. 169. பார-சாந்தி 344-45.
170 பத்ம-அவட 8-7. 171 ராமா 1-2.

[[illegible] இருபத்துநாலாயிரம் [illegible] [illegible] ஆதாரமுடையதை, [illegible] கூடிய தாகவும் [illegible] பாடினார்.]

172. [illegible] கேடே ச மதுரம் பராஜிதேஸ் த்ரிப்ரக்லிதம்।
[[illegible] மூன்றுவிதமான அளவுகளுடன் [illegible] இனிமையாய் [illegible].]

173. ஸர்வகந்தஸ் ஸர்வரஸ.
[(பரமபுருஷன்) எல்லா [illegible]; எல்லா [illegible] யுமுடையவன்.]

173* ரஸோ வை ஸ:। ரஸம் ஹ்யேவாயம் லப்த்வாநந்தீ பவதி।
கோ ஹ்யேவாந்யாத் க: ப்ராண்யாத்।
யதேஷ ஆகாச ஆநந்தோ ந ஸ்யாத்।
ஏஷ ஹ்யேவாநந்தயாதி॥
[ரஸ (ஆநந்த) ஸ்வரூபனே அந்தப் பரமபுருஷன். [illegible] [illegible] அவனை அடைந்து (இந்த ஜீவன்) ஆநந்தத்தை உடைய [illegible] பிரகாசிப்பவனும், ஆநந்தஸ்வரூபனுமான இப் [illegible] இல்லாவிடில் எவன் இவ்வுலகிலுள்ள [illegible], மோக்ஷானந்தத்தைப் அடையமுடியும்? (ஆகையால்) இவனே (ஜீவனை) ஆநந்திப்பிக்கிறான்.]

174. தத்தேது வ்யபதேசாச்ச
[ஜீவனின் ஆநந்தத்திற்குக் காரணமாகப் பரமனைச் சொல்லுகை யாலே, (பரமன் ஜீவனினும் வேறானவனே.)]

175. அமுருஷ்ய ஹி தாராம் தமஸ: பாரம் தாமயதி ஸுக்ஷம ந:
[மோக்ஷமளிப்பவனும், ப்ரக்ருதிக்கு அப்பாற்பட்டவனுமான பரமனை [illegible] காண்பிப்பார்.]

176. ஸோऽஹம் தே தேவதேவேச நார்சநாதௌ ஸ்துதௌ ந ச।
ஸாமர்த்யவாந் க்ருபாமாத்ரமநோவ்ருத்தி: ப்ரஸீத மே॥

172. [illegible] 4-8. 173 [illegible] 8-14-2. 173* தைத்-ஆந 7.
174. ப்ர-ஸூ 1-1-15. 176. வி-பு 5-7-70.

[அஸுரர்களுக்கும் தேவர்களான சிதவனசிரர்களுக்கும் தலைவனே! இப்படிப்பட்ட என் உன்னுடைய ஸ்துதியிலும், அர்ச்சனை முதலிய வைதிகமும் ஸாமர்த்தியம் உடையவனல்லேன். அருள் கூர்ந்த திருவுள்ளத்துடன் கூடியவனாய் எனக்கு தயை புரிய வேண்டும்.]

177. தூர்போதா வைதிகா: சப்தா:
[வேதத்திலுள்ள சொற்கள் பொருளுணரவரியவை.]

178. த்வம் ஹி ருத்ர மஹாபாஹோ மோஹஸாஸ்த்ராணி காரய ।
தாமஸிதவாநல்பமாயாஸம் பலம் ஸீக்ரம ப்ரதர்ஸய ॥
[நீண்ட கைகளையுடைய ருத்ரனே! நீ மயக்க (ஆகம) சாஸ்திரங்களைச் செய்வாயாக; சிறிது சிரமத்தினை மேற்கொள்ள, விரைவில் பலத்தைக் காண்பிப்பாயாக.]

179. ஸ பித்ரா ச பரித்யக்தஸ் ஸுரைச்ச ஸமஹர்ஷிபி: ।
த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ ஸரணம் கத: ॥
ஸ தம் நிபதிதம் பூமௌ ஸரண்ய: ஸரணாகதம் ।
வதார்ஹமபி காகுத்ஸ்த: க்ருபயா பர்யபாலயத் ॥
[அந்தக் காகாஸுரன், தந்தையினாலும், (தாயினாலும்) மஹர்ஷிகளுடன் கூடிய தேவர்களாலும் கைவிடப்பட்டவனாய், மூன்று உலகங்களையும் சுற்றித்திரிந்து அந்த ராமனையே சரணமடைந்தான். சரணமடைந்தவனும், பூமியில் விழுந்தவனுமான அவனை, கொல்லத் தக்கவனாயிருந்த போதிலும், சரணமடையத்தக்கவனான ஸ்ரீராமபிரான் (தன்) அருளாலே காப்பாற்றினான்.]

180. ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம் உத்த்ருத்ய புஜமுச்யதே ।
வேதசாஸ்த்ரம் பரம் நாஸ்தி ந தைவம் கேஸவாத் பரம் ॥
[உண்மை, உண்மை; மறுபடியும் உண்மை என்று கை தூக்கிக் கொண்டு சொல்லுகிறேன்; வேதத்திலுயர்ந்த சாஸ்திரமில்லை; கேசவனிலுயர்ந்த தெய்வமில்லை.]

181. யாமிமாம் புஷ்பிதாம் வாசம் ப்ரவதந்த்யவிபஸ்சித: ।
வேதவாதரதா: பார்த்த நாந்யதஸ்தீதி வாதிந: ॥

---

178. வராஹபுராணம் 10-36   179. ரா-ஸு 38-34&35.
180. நாரதீயபுராணம் 18-33.   181. கீதை 2-42&44.

போகைச்வர்ய ப்ரஸக்தாநாம் தயாபஹ்ருதசேதஸாம் ।
வ்யவஸாயாத்மிகா புத்தி: ஸமாதௌ ந விதீயதே

[அர்ஜுன! வேதத்தில் சொல்லப்பட்ட ஸ்வர்க்காதிகளாகிய பலன்களைப்பற்றிய வாக்கியங்களிலேயே ஈடுபட்டவர்களும், 'இப்பலன்களைத்தவிர வேறொன்றுமில்லை' என்பவர்களுமான சில அறிவு கெட்டவர்கள், காய்க்காத பூப்போன்ற (போகைச்வர்யங்களைப்பற்றிய) யாதொரு வார்த்தையைப் பேசுகிறார்களோ, அந்தப் பேச்சாலேயே மனம் மழுங்கப்பெற்றவர்களும், போகங்களிலும் செல்வங்களிலும் ஈடுபட்டவர்களுமான அவர்களுக்கு கீழ் சொல்லப்பட்ட உறுதியான புத்தி மனஸ்ஸில் உண்டாகாது.]

182 த்ரைவித்யா மாம் ஸோமபா: பூதபாபா:
யஜ்ஞைரிஷ்ட்வா ஸ்வர்கதிம் ப்ரார்த்தயந்தே ।
தே புண்யமாஸாத்ய ஸுரேந்த்ரலோகம்
அச்நந்தி திவ்யாந் திவி தேவபோகாந் ॥
தே தம் புக்த்வா ஸ்வர்க்கலோகம் விசாலம்
க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விசந்தி ।
ஏவம் த்ரயீதர்மமநுப்ரபந்நா
கதாகதம் காமகாமா லபந்தே ॥

[ருக்யஜுஸ்ஸாமரூபமான மூன்று வேதங்களின் பூர்வபாகத்தில் நிலைநிற்பவர்களாய், தேவர்களைக் குறித்துச் செய்யப்படும் யாகத்தில் மிகுந்த ஸோமத்தைப் பானம் செய்பவர்களாய், (ஸ்வர்க்கத்தை யடைய இடையூறாயிருக்கும்) பாபத்திலிருந்து நீங்கப்பெற்றவர்களாய், யஜ்ஞங்களால் ஆராதித்து ஸ்வர்க்கத்தைப் பிரார்த்திக்கிறார்கள்; அவர்கள், மிகப்பெரிதான ஸ்வர்க்கலோகத்தை அனுபவித்துவிட்டு, (அதற்குக்காரணமான) புண்ணியம் கழிந்தவளவில், மனிதலோகத்தினுள் நுழைகின்றனர்; ஆகவிப்படிக் காம்யகர்மங்களில் விருப்பங்கொண்டு வேதத்தில் பூர்வபாகங்களைப் பின்பற்றி நிற்பவர்கள் மீண்டு மீண்டு வரும் பலனை அடைகிறார்கள்.]

183. ப்ரஹ்மவிதாப்நோதி பரம்
[ப்ரஹ்மத்தையறிந்தவன் மேலான பலனையடைகிறான்.]

182. கீதை 9-20, 21. 183. தை-ஆ

184. யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்
யோ வை வேதாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை।
தம் ஹ தேவமாத்மபுத்தி ப்ரகாசம்
முமுக்ஷுர் வை சரணமஹம் ப்ரபத்யே॥
[எவன் பிரமனை முன் படைத்தானோ, எவன் வேதங்களையும் அவனுக்கு உபதேசித்தானோ, அப்படிப்பட்ட தேவனும், தன் விஷயமான ஞானத்தைப் ப்ரகாசிப்பிப்பவனுமான எம்பெருமானை, மோக்ஷமடைய விரும்பும் நான் சரணமடைகிறேன்.]

185. ப்ராஹ்மணானாம் தநம் வேத:
[அந்தணர்க்கு அருமறையே செல்வமாகும்]

186. யோ தத்யாத் பகவத்ஜ்ஞானம் குர்யாத் வா தர்மதர்சனம்।
க்ருத்ஸ்னாம் வா ப்ருதிவீம் தத்யாந் ந தத்துல்யம் கதஞ்சந॥
[பகவானைப்பற்றிய அறிவை எவன் அளிக்கிறானோ, பகவானை அடையும் உபாயத்தை எவன் அறிவிக்கிறானோ, பூமி முழுவதையும் அவனுக்களிக்கவேண்டும்; அது அவனளித்ததற்கு ஒருபடியாலும் ஒப்பாகாது.]

187. மித்ரமௌபயிகம் கர்த்தும் ராம: ஸ்தானம் பரீப்ஸதா।
வதம் சாநிச்சதா கோரம் த்வயாஸௌ புருஷர்ஷப:॥
[(ராவண!) நீ உன்னுடைய குடியிருப்பை விரும்பினாயாகில், கோரமான வதத்தை விரும்பாமலிருந்தாயில்லை, இந்தப் புருஷச்ரேஷ்டரான ஸ்ரீராமபிரானை நண்பனாகக் கொள்வது தகுந்தது.]

188. யோ மா ததாதி ஸ இதேவ மாவா:।
[எவன் என்னைப் பரமனுக்கு அளிக்கிறானோ அவனே எனக்கு ரக்ஷகன்.]

189. தர்மார்த்தௌ யத்ர ந ஸ்யாதாம் சுச்ரூஷா வா ததாவிதா।
தத்ர வித்யா ந வப்தவ்யா சுபம் பீஜமிவோஷரே॥
[அறமும் பொருளும் எந்த இடத்தில் இல்லையோ, அப்படியே சுச்ரூஷையும் எவ்விடத்தில் இல்லையோ, கல்வியைக் களர் நிலத்தில

184. ச்வேதா. 6-18. 186. விஷ்ணுதர்ம 70-78. 187. ராமா. 21-19.
188. தைத்ரீ 10-6. 189. மநுஸ்ம்ருதி 2-112.

விஷயங்களுக்கடீதத்தைப்போல, அவனிடம் விஷயங்களை விஷைக்கக் கூடாது.]

190 அர்த்ததோ தர்மத: சுசநோ ஹரத்பாட:

[பொருளை அளிப்பவனும், அறத்தை அளிப்பவனும், சுசீலனுமான ஒருவனை உடனே அதிபகனம் செய்விக்கத்தக்கவன]

191. கார்ப்பண்ய தோஷோபஹதஸ்வபாவ:
ப்ருச்சாமி த்வா தர்மஸம்மூடசேதா: ।
யச்ச்ரேய: ஸ்யாந்நிச்சிதம் ப்ரூஹி தந்மே
சிஷ்யஸ் தேऽஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம் ॥

[என் செய்யப்படுவது என்ற அறிவாளனும், பலபடிப்பட்ட கர்மங்களைக்கண்டு கலங்கின மனத்தையுடையவனுமாய் உன்னைக் கேட்கிறேன். எது எனக்கு நல்லது என்று நீ நிச்சயிக்கிறாயோ, அதை எனக்குச் சொல்வாயாக. நான் உன்னுடைய சிஷ்யன், உன்னை சரணமடைந்த என்னை சிக்ஷிப்பாயாக]

192. ச்ருயதாம் பரமார்த்தோ வை தைதேயா திதிஜாத்மஜா: ।
ந சாந்யதைதந் மந்தவ்யம் நாத்ர லோபாதி காரணம் ॥

[அசுர புத்திரர்களே! என்னிடமிருந்து இவ்வுண்மைப்பொருளைக் கேளுங்கள், இதை வேறுவிதமாக எண்ணலாகாது; இதில் விருப்பத்தில் ஆசை முதலியவை காரணமல்ல]

192* நாகிஞ்சித் குர்வத: சேஷத்வம்

[கைங்கர்யம் செய்யாதவனுக்கு சேஷத்வமில்லை.]

193. ஸாபேக்ஷ இவ சேஷ்டதே

[அபேக்ஷையுள்ளவனைப்போல (அர்ச்சாவதாரப்பெருமான்) நடக்கிறான.].

194. ஸகே ராகவ தர்மஜ்ஞ சிப்ருணுமபீ வத்ஸல ।
அபயஞ்ஜ்ஞாதுமிச்சாமி கமிஷ்யாமி யத கதம் ॥

191 கீதை 2-7. 192. வி-பு 1-17-55 194. ய-யு 50-5t.

[கண்பிற கொண்டதில் உதித்தவரே! ஸர்மத்தை அறிந்தவரே! சத்ருக்களுக்கும் வாத்ஸல்யத்தை உடையவரே! விடைபெற்றுக்கொள்ள விரும்புகிறேன்; வந்தவாறே போய்விடுகிறேன்.]

195. தேவாநாம் தாநவாநாஞ்ச ஸாமாந்யமதிதைவதம் |
ஸர்வதா சரணத்வந்த்வம் வ்ரஜாமி சரணம் தவ ||

[பக்தியுடைய தேவர்க்கும், பக்தியற்ற அஸுரர்களுக்கும், எப்போதும் பொதுவாகப் பற்றக்கூடிய தேவதையாயிருக்கும் உன் திருவடியிணையை உபாயமாக நிச்சயிக்கிறேன்.]

196. உதாராஸ் ஸர்வ ஏவைதே ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்
[இவர்கள் எல்லாரும் உதாரமானவர்களே, ஜ்ஞாநியோ எனக்கு ஆத்மா (தாரகன்) என்று என் ஸித்தாந்தம்.]

197. த்விஷதந்நம் ந போக்தவ்யம் த்விஷந்தம் நைவ போஜயேத் |
பாண்டவாந் த்விஷஸே ராஜந் மம ப்ராணா ஹி பாண்டவா: ||
[த்வேஷிப்பவனின் அன்னம் புஜிக்கத்தக்கதன்று, த்வேஷிப்பவனை புஜிப்பிக்கவும் கூடாது. அரசனே! நீ பாண்டவர்களை த்வேஷிக்கிறாய். பாண்டவர்கள் எனக்கு ப்ராணனன்றோ.]

198. ஆசார்யவாந் புருஷோ வேத
[ஆசாரியனையுடைய புருஷனே (உண்மையை) அறிகிறான்.]

199. 71—வது ப்ரமாணம் காண்க.

200. நாவேக்ஷஸே யதி ததோ புவநாந்யமூநி
நாலம் ப்ரபோ பவிதுமேவ குத: ப்ரவ்ருத்தி: |
ஏவம் நிஸர்கஸுஹ்ருதி த்வயி ஸர்வஜந்தோ:
ஸ்வாமிந் ந சித்ரமிதமாச்ரித வத்ஸலத்வம் ||

[ஸ்வாமியே! நீ கடாக்ஷித்திராவிடில், ப்ரளயத்தினைப்போல இவ்வுலகங்கள் உண்டாகவேமாட்டாது; காரியமும் செய்யமாட்டாது

195. ஜிதந்தே-2. 196. கீதை 7-18. 197. பாரதம் 74-27.
198. சாந் 6-14-2. 200. ஸ்தோத்ர-10.

என்பது சொல்லவும் வேண்டுமோ? ஸ்வாமீ! இப்படி எல்லாப் பிராணிகளுக்கும் இருக்கையால் என்னை உனக்குக் கைவிட்டதில்லை, ஆச்ரித வாத்ஸல்யமான இந்த குணமன்றோ ஆச்ரயணீயம்]

201. ஸ்ரீமாந் ஸுகுணஸம்பந்ந: ஸர்வலோகைகநாத: ।

[ஸ்ரீமானும் நற்குணங்களோடு கூடியவனும்; எல்லா உலகத்துக்கும் நாதனுமாயுமுடையவன் ஒருவனே இருப்பவன்.]

202. விதித: ஸ ஹி தர்மஜ்ஞ: சரணாகத வத்ஸல: ।
தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிதுமிச்சஸி ॥

[(ராவணா!) ஸ்ரீராமபிரான் தர்மத்தை அறிந்தவராகவும், சரணமடைந்தவரிடம் வாத்ஸல்யமுடையவராகவும் பிரஸித்தமானவர். நீ உயிர்வாழ விரும்பினாயாகில் அவருடன் உனக்கு நட்பு உண்டாகட்டும்.]

203. மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந ।
தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத் ஸதாமேததகர்ஹிதம் ॥

[நண்பனுடைய பாவத்தோடு வந்தவனை ஒருபொழுதும் கைவிடமாட்டேன், அவனிடம் தோஷமிருந்தாலும் இருக்கட்டும்; நல்லோர்களுக்கு இவனை ஸ்வீகரிப்பது நிந்திக்கத்தக்கதல்ல.]

204. ரகுவர யதபூஸ்த்வம் தாத்ருசோ வாயஸஸ்ய
ப்ரணத இதி தயாளுர் யச்ச சைத்யஸ்ய க்ருஷ்ண ।
ப்ரதிபவமபராத்துர் முக்த ஸாயுஜ்யதோऽபூ:
வத கிமபதமாகஸ்தஸ்ய தேऽஸ்தி க்ஷமாயா: ॥

[ரகுநாதனாக விளங்கின ராமனாக அவதரித்தவனே! அப்படிப் பட்ட (பெரும் பாவம் செய்த) காகாஸுரனை விட்டதோடு, ஸாதுவென்று நினைத்து அருளினவனன்றோ. தேவகீபுத்ரனான க்ருஷ்ணனே! ஜன்மாந்தரமும் அபராதம் செய்த சேதிநாட்டரசனான சிசுபாலனுக்கு மோக்ஷம் கொடுத்தருளினவனல்லவோ நீ. அப்படிப

பட்டனுடைய பொறுமைக்குப் பாத்திரமல்லாத பாபங்களை இருக்கிறது? நீயே அருளிச்செய்யவேணும்.]

205 த்ரஸ்தஸ்யாகாதேர ஸ்ரீஹரணீயஸ்ய மஹதோ
நிக்ருஷ்டஸாரோஹம் நிருபமாபராதாஸ்பதமபி।
தயாஸிந்தோ பந்தோ நிரவதிக வாத்ஸல்யஜலதே
தவ ஸ்மாரம் ஸ்மாரம் குணகணமிதீச்சாமி கதபீ:॥

[கருணைக்கடலான பிரானே! எல்லாவித பந்துவுமானவனே! எல்லையற்ற வாத்ஸல்யத்துக்குக் கடலாயிருப்பவனே! முடிவற்றதும் ஆரம்பமில்லாததும் போக்கமுடியாததுமான பெரிய பாபத்திற்கு உறைவிடமாயிருக்கிறபோதிலும் உன்னுடைய குணக்கூறுகளை நினைந்து நினைந்து பயமற்றவனாய் இம்மாதிரி ஆசைப்படுகிறேன்.]

206. ஆச்ரித வாத்ஸல்யைக மஹோததே

[அடியாரிடம் வாத்ஸல்யத்துக்கோர் பெருங்கடலாயிருப்பவனே!]

207. 196-வது ப்ரமாணம் காண்க

கண்ணிநுண்சிறுத்தாம்பு வ்யாக்யான ப்ரமாணத்திரட்டு முற்றிற்று.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

205. ஸ்தோத்ர-58. 206. ஸ்ரீரங்கஸ்தவ.

ப்ரமாண அநுக்ரமணிகை

ஸ்ரீஸூக்திமாலா வெளியீடுகள்

பதவுரை, அரும்பதவுரை ப்ரமாணத்திரட்டு முதலானவற்றோடுகூடிய, பூர்வாசார்ய க்ரந்தங்கள்.

க்ரந்தங்கள்	விலை	தபால்
1. பரந்த ரஹஸ்யம் முதலிய எட்டு ரஹஸ்யங்கள்	1 8 0	
2. மாணிக்கமாலை முதலிய [illegible] வ்யாக்யானங்கள்	3 8 0	6
3. திருப்பல்லாண்டு வ்யாக்யானம்	1.8.0	1
4. [illegible] திருவந்தாதி வ்யாக்யானம்	1 14 0	1
5. பெருமாள் திருமொழி வ்யாக்யானம்	1 14 0	4
6. திருமாலை வ்யாக்யானம்	2 12 0	5
7. திருவாசிரியம் பெரிய திருவந்தாதி வ்யாக்யானம்	1.10 0	4
8. சதுஸ்லோகீ வ்யாக்யானம் ஸ்வாபதேசத்தோடு	1 8 0	3
9. கீதா வ்யாக்யானங்கள்	2.0.0	4
10. நாச்சியார் திருமொழி வ்யாக்யானம்	4.0.0	4
11. திருச்சந்த விருத்த வ்யாக்யானம்	3 0 0	4
12. நான்முகன் திருவந்தாதி வ்யாக்யானம் (விவரணத்துடன்)	2.8.0	6
டி௸ மலிவுப் பதிப்பு	2.0.0	6
13. ஸ்ரீராமாயண தனிச்லோகம் விவரணத்துடன்	3.8.0	6
டி௸ மலிவுப் பதிப்பு	2 12.0	6
14. திருப்பள்ளியெழுச்சி வ்யாக்யானம்	0.8.0	1
15. பாசுரப்படி ராமாயணம் (விலையில்லை தபால் கூலி 0 1.0)		
16. அமலனாதிபிரான் வ்யாக்யானம்	1.14.0	4
17. கண்ணிநுண் சிறுத்தாம்பு வ்யாக்யானம்	2.12 0	6

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் வெளியீடுகள்

1. திருப்பல்லாண்டு வ்யாக்யானம்	1.8.0	
2. திருப்பாவை வ்யாக்யானம்	2.4.0	4
3. ஸந்த்யாவந்தன பாஷ்யம்	2 4 0	4
4. புருஷஸூக்த வ்யாக்யானம்	0.12 0	
5. நாராயணஸூக்த வ்யாக்யானம்	0 12 0	
6. ஸ்ரீஸூக்த வ்யாக்யானம்	2 0 0	6
டி௸ மலிவுப் பதிப்பு	1 8 0	5
7. அபயப்ரதராஜ விஜயம்	0 10.0	
8. கம்பராமாயணம் (கையடைப்படலம் முடிய	2 8.0	6
9. ராமாநுஜதேசிக ஸ்தோத்ரங்கள்	1 0 0	3
10. பலதாரமணம்	0.4 0	
11. பாகவத தசமஸ்கந்த கீர்த்தனை பூர்வ பாகம்	4 0 0	
டி௸ உத்தர பாகம்	4 0.0	
12. ஸ்ரீரங்கசைல மணிமாலை	0.8 0	1

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அட்வகேட்,
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

ஸ்ரீனிவாஸா பிரஸ், புத்தூர், திருச்சி.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
3	தலைப்பு	தனியன்	தனியன்
15	2	25	24
19	28	अत	एतत
37	13	46	43
61	1	78	73
80	30	101	1
94	15	109	109ஃ
121	13	பக்கள்	பக்கல்
123	3	ப்ரதிபாதசமான	ப்ரதிபாதகமான
124	18	ப்ரமாணைதர	ப்ரமாணாந்தர
133	13	द्रयाणि	द्रव्याणि
135	1	பஹரித்கால்	அபஹரித்தால்
155	9	கிதப	கித்ப
183	4	(பா) பலாதி	(பா) பலப்ரதத்வாதி
228	15	வாலும்	வாளும்
238	1	ஸ்வதுரக்கல்	ஸ்வதுரக்ஷஸ்
241	3	அசேன	அசேதன
245	1	ப்ரக்ரு	ப்ரக்ருதிம்

(பா) பாடபேதம்.